Service, redefined. **Continental** INSURANCE

# கொன்டினென்டல் இன்சூரன்ஸ் லங்கா லிமிட்டெட்

கம்பனி இலக்கம் **PB3784**

தலைமை அலுவலகம்: இலக்கம் 79, கலாநிதி சீ. டப்ளியு. டப்ளியு. கன்னங்கர மாவத்தை, கொழும்பு 07.
தொலைபேசி : 0112 5200300 தொலைநகல் : 011 5200350
வெப்தளம் : www.cilanka.com

## மோட்டார் வாகனக் காப்புறுதிப்பத்திரம்

இதன் அட்டவணையில் பெயரிடப்பட்டுள்ள காப்புறுதி செய்யப்பட்டவர் (இதன் பின்னர் காப்புறுதி செய்யப்பட்டவர் என்றழைக்கப்படுவார்) கொன்டினென்டல் இன்சூரன்ஸ் லங்கா லிமிட்டெட் (இதன் பின்னர் "கம்பனி" என்றழைக்கப்படுகின்ற) நிறுவனத்துக்கு இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஒரு காப்புறுதிக்காக இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையாக அமையக்கக்கூடியதும் இதில் உள்ளடக்கப்பட்டிருக்கக் கூடியதுமான ஒரு பிரேரணைப்பத்திரம் மற்றும் பிரகடனத்தின் மூலம் விண்ணப்பித்துள்ளதாலும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளதாலும் அல்லது செலுத்துவதற்கு இணங்கியுள்ளதாலும்,

மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காப்புறுதிக் கால எல்லையின் போது அல்லது இந்தக் காப்புறுதிப்பத்திரத்தின் புதுப்பித்தலுக்காக கம்பனி கொடுப்பனவை ஏற்றுக் கொள்ளக்கூடிய கால எல்லையின் போது ஏற்படுகின்ற இழப்பு அல்லது சேதத்துக்கு எதிராக இதில் அடங்கியுள்ள அல்லது புறக்குறிப்பு இடப்பட்டுள்ள அல்லது வேறு வகையில் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள நியதிகள், நிபந்தனைகள் மற்றும் விதிவிலக்குகளுக்கு உட்பட்டு நட்டஈடு வழங்க இணக்கம் தெரிவிக்கிறது.

### பிரிவு 1 : வாகனத்திற்கு ஏற்படுகின்ற இழப்பு அல்லது சேதம் (DAMAGE TO OR LOSS OF VEHICLE)

1. அட்டவணையில் (அட்டவணைகளில்) குறிப்பிடப்பட்டுள்ள ஏதும் மோட்டார் வாகனம் அல்லது அதில் பொருத்தப்பட்டிருக்கக்கூடிய உபகரணங்கள் மற்றும் உதிரிப் பாகங்களுக்குக் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்வுகள் மூலம் ஏற்படக்கூடிய இழப்பு அல்லது சேதத்துக்கு எதிராக கம்பனி காப்புறுதி செய்யப்பட்டவருக்கு நட்டஈடு வழங்கும்:

   (அ) வெளிவாரியான விபத்துக்கள்
   (ஆ) தீ, வெளிவாரியான வெடித்தல், சுய-தீப்பற்றல், மின்னல் அல்லது கொள்ளை, கன்னம்வைத்தல் அல்லது திருட்டு
   (இ) துவேசகரமான செயல்
   (ஈ) சாலையில், தண்டவாளத்தில், உள்நாட்டு நீர் மார்க்கத்தில், மேலுயர்த்தியில் அல்லது எலிவேட்டரில் பெயர்க்கப்படும் போது

எனினும் அது பின்வரும் விதிவிலக்குகளுக்கு உட்பட்டிருக்கும்,

(i) ஒரே சமயத்தில் வாகனத்திற்கும் ஏனைய சேதங்கள் ஏற்பட்டிருந்தாலேயன்றி டயர்களுக்கும் டியுப்களுக்கும் இறப்பர் பொருட்களுக்கும் என்ஜின் பாகங்களுக்கும் ஏற்படுகின்ற சேதம். இவ்வாறான சந்தர்ப்பங்களில் டயர்களுக்கும் டியுப்களுக்கும் இறப்பர் பொருட்களுக்கும் என்ஜின் பாகங்களுக்கும் ஏற்படுகின்ற சேதத்துக்காக கம்பனி செலுத்துகின்ற நட்டஈட்டின் அளவு மீளப்பொருத்தும் செலவின் 50 சத வீதத்தை தாண்ட மாட்டாது.

(ii) தனியார் கார்கள் என்ற வகையில் காப்பீடு செய்யப்பட்டுள்ள வாகனங்களைத் தவிர, ஒரே சமயத்தில் வாகனமும் திருடப்பட்டிருந்தாலன்றி கொள்ளை, கன்னம்வைத்தல் அல்லது திருட்டு காரணமாக துணைப் பாகங்கள், உதிரிப்பாகங்கள் அல்லது அத்தியவசிய பாகங்களுக்கு ஏற்படுகின்ற இழப்பு அல்லது சேதம்.

(iii) பேருந்துகள், ஓம்னிபஸ்கள் மற்றும் மோட்டார் கோச்சுகள் என்ற வகையில் பதிவு செய்யப்பட்டுள்ள வாகனங்களின் வளித்தடுப்பு (Windscreen) / யன்னல்களுக்கு ஏற்படுகின்ற,

   i. மேற்படி மோட்டார் வாகனத்தின் காப்புறுதி செய்யப்பட்டவரின் பெறுமதி மதிப்பீடு (துணைப்பாகங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் உட்பட),

   ii. மேற்படி மோட்டார் வாகனத்தின் பெறுமதி (துணைப்பாகங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் உட்பட) ஆகிய இரண்டில் குறைந்த பெறுமதியின், 10 வீதத்துக்கு அதிகமான இழப்பு அல்லது சேதம்

(iv) வாடகை நோக்கங்களுக்காக காப்பீடு செய்யப்பட்டுள்ள அனைத்து வாகனங்களினதும் விளக்குகள், டயர்கள், மட்காட்கள், பபர்கள், பபர்ஏப்ரன்கள், பபர்பிரகெட்கள் அல்லது பெயின்ட் வேலைகள் ஆகியவற்றுக்கு ஏற்படுகின்ற இழப்பு அல்லது சேதம்.

(v) ஒரே சமயத்தில் வாகனத்திற்கும் ஏனைய சேதங்கள் ஏற்பட்டிருந்தாலன்றி வாகனத்தில் பொருத்தப்பட்டுள்ள காற்றுப்பைகள் (Air Bag). எனினும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் காற்றுப்பைகள் சம்பந்தமாக கம்பனியால் செலுத்தப்படுகின்ற நட்டஈட்டின் அளவு அதனைப் புதிதாக பொருத்துவதற்கான செலவின் 50 வீதத்தை தாண்டாது.

**முக்கியம்**
உங்களது பாதுகாப்புக் கருதி இந்தக் காப்புறுதிப்பத்திரத்தை நன்கு வாசியுங்கள். அதில் ஏதும் பிழைகள் இருப்பின் அல்லது வழங்கப்பட்டுள்ள காப்பீடு உங்களது தேவைகளை நிறைவு செய்வதாக இல்லை என்றிருந்தால் திருத்துவதற்காக காப்புறுதிப் பத்திரத்தை உடனடியாக கம்பனிக்கு திருப்பி அனுப்பவும்.

**குறிப்பு :**
மேலே குறிப்பிடப்பட்டிருப்பது கொன்டினென்டல் இன்சூரன்ஸ் லங்கா லிமிட்டெட் **"MOTOR VEHICLE INSURANCE"** மூலக் காப்புறுதிப்பத்திரத்தின் மொழிபெயர்ப்பு மாத்திரமேயாகும். ஏதும் பொருள் மயக்கத்தின் போது அல்லது சட்ட சிக்கல்களின் போது அதன் மூலப் பிரதியே செல்லுபடியானதாகக் கொள்ளப்படும் என்பதை கவனிக்கவும்.

2. பின்விளைவு இழப்பு, பெறுமதி குறைதல், பாவனையால் தேய்தல், இயந்திர அல்லது மின்சார செயலிழப்பு, பிரேக் செயற்படாமை, மைக்ரோ சிப், பொருத்தப்பட்டுள்ள சிப், ஒன்றிணைக்கப்பட்ட சர்கிட்கள் அல்லது அதற்கு சமமான உபகரணங்கள், ஏதும் ஒரு திகதியை அல்லது பஞ்சாங்க திகதியை சரியாக அறிந்து கொள்ள முடியாது போதல் உள்ளிட்ட அல்லது அதிக சுமையேற்றல் அல்லது அந்த வாகனத்தின் சுமையின் தன்மை காரணமாக ஏற்படுகின்ற அழுத்தங்கள் ஆகியவற்றுக்கு எதிராக கம்பனி எந்த கொடுப்பனவையும் மேற்கொள்ளாது.

3. காப்புறுதி செய்யப்பட்டவர் ஒவ்வொரு நிகழ்வு தொடர்பாகவும் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அளவினை அல்லது காப்புறுதி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேறேதும் ஓர் அளவினை (அல்லது பொறுப்பேற்க முடிகின்ற அதைவிடவும் குறைந்த அளவினை) அல்லது இதன் கீழுள்ள ஏதும் செலவுகளைப் பொறுப்பேற்றல் வேண்டும். இதன் கீழ் காப்புறுதி செய்யப்பட்டவர் பொறுப்புக் கூறவேண்டியுள்ள தொகையில் கம்பனி பொறுப்பேற்றுள்ள செலவுகளும் உள்ளடக்கப்படுமாயின், அந்த தொகையையும் காப்புறுதி செய்யப்பட்டவர் உடனடியாக கம்பனிக்கு செலுத்துதல் வேண்டும். இந்தப் பிரிவின் கீழ் இழப்பீடு வழங்குகின்ற இந்த துணைப்பிரிவின் நோக்கத்துக்காக "சம்பவம்" எனும் பிரயோகத்தில் இந்தப் பிரிவின் கீழ் நட்டஈடு வழங்கப்படுகின்ற ஏதும் ஒரு வாகனத்துடன் தொடர்புடைய ஏதும் ஒரு காரணத்தினால் ஏற்படுகின்ற ஏதும் ஒரு நிகழ்வு அல்லது தொடர் நிகழ்வுகளும் உள்ளடங்கும்.

| | |
|---|---|
| i) தனியார் கார் | இல்லை |
| ii) மோட்டார் சைக்கிள் | முதல் ரூபா 500 |
| iii) அனைத்து வாடகை வாகனங்களும் | முதல் ரூபா 1000 |

4. இந்தக் காப்புறுதிப்பத்திரத்தின் கீழ் காப்பீடு வழங்கப்பட்டுள்ள இழப்பு அல்லது சேதம் காரணமாக மேற்படி வாகனத்தை ஓட்டிச் செல்ல முடியாத நிலை தோன்றினால், மேற்படி வாகனத்தைப் பாதுகாத்து கம்பனியால் ஏற்றுக் கொள்ளப்பட்ட அருகிலுள்ள கராஜ்'க்கு கொண்டு சென்று காப்புறுதி செய்யப்பட்டவருக்கு மீள ஒப்படைத்தல் வரை ஏற்படுகின்ற நியாயமான செலவை கம்பனி பொறுப்பேற்குமாயினும் அந்த அளவு ஏதேனும் ஒரு விபத்துக்காக மோட்டார் சைக்கிளாயின் ரூபா 500 ஐயும் ஏனைய வகனங்களாயின் ரூபா 2500 ஐயும் தாண்ட மாட்டாது.

5. இந்தக் காப்புறுதிப்பத்திரத்தின் கீழ் கம்பனி பொறுப்புக் கூற வேண்டியுள்ள ஒரு சேதம் குறிப்பிட்ட வாகனத்துக்கு ஏற்பட்டால் அது தொடர்பாக உடனடியாக கம்பனிக்கு அறிவிக்க வேண்டும் என்பதுடன், கம்பனியின் எழுத்துமூல முன் அனுமதியின்றி அதனைத் திருத்துவதற்கான எந்த நடவடிக்கையையும் ஆரம்பித்தல் அல்லது மேற்படி வாகனத்தின் ஏதும் ஒரு பாகத்தை கழற்றுதல், அல்லது வாகனத்தை திருத்துவதற்கான ஏதும் மதிப்பீடுகளைக் காப்புறுதி செய்யப்பட்டவர் ஏற்றுக் கொள்ளலாகாது.

## கோரிக்கை விடுக்காமைக்காக கழிவு / போனஸ் (NO CLAIM DISCOUNT/BONUS)

6. இந்த காப்புறுதிப்பத்திரத்தின் கீழ் உரிமைக்கோரிக்கை விடுக்கப்படாவிட்டால் அல்லது எழாவிட்டால் மற்றும் பின்வரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வாகனம் காப்பீடு செய்யப்பட்டிருந்தால் பின்வரும் வகையில் கோரிக்கை விடுக்காமைக்கான கழிவை காப்புறுதியைப் புதுப்பிக்கும் போது பெற்றுக் கொள்ள காப்புறுதி செய்யப்பட்டவர் தகைமை பெறுகிறார்.

| | மோட்டார் சைக்கிள் | ஏனைய வாகனங்கள் |
|---|---|---|
| 1 வது புதுப்பித்தல் | 10% | 15% |
| 2 வது புதுப்பித்தல் | 15% | 20% |
| 3 வது புதுப்பித்தல் | 20% | 25% |
| 4 வது புதுப்பித்தல் | 25% | 30% |
| 5 வது புதுப்பித்தல் | -- | 40% |
| 6 வது புதுப்பித்தல் | -- | 50% |
| 7 வது புதுப்பித்தல் | -- | 65% |

இந்த காப்புறுதிப்பத்திரத்தின் உரிமையை மாற்றுவதற்கு கம்பனி இணக்கம் தெரிவித்தால் மாற்றுபவர் ஈட்டியிருந்த கோரிக்கை விடுக்காமை கழிவு மாற்றப்படுபவரின் கணக்கில் சேர்க்கப்பட மாட்டாது.

இந்த காப்புறுதிப்பத்திரத்தின் அட்டவணையில் (அட்டவணைகளில்) ஒன்றுக்கு மேற்பட்ட வாகனங்கள் குறிப்பிடப்பட்டிருந்தால் மேற்படி ஒவ்வொரு மோட்டார் வாகனம் சம்பந்தமாகவும் வெவ்வேறு காப்புறுதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதாக கொள்ளப்பட்டு கோரிக்கை விடுக்காமைக்கான கழிவு பிரயோகிக்கப்படும்.

## பிரிவு 2 : மூன்றாந் தரப்புக்கான பொறுப்பு (LIABILITY TO THIRD PARTIES)

(அ) தனியார் கார்களுக்கு மாத்திரம் ஏற்புடையதாகும்

1. மேற்படி அட்டவணையில்/ அட்டவணைகளில் விபரிக்கப்பட்டுள்ள ஏதும் ஒரு மோட்டார் வாகனத்தினால் அல்லது அந்த வாகனம் தொடர்புபட்ட அல்லது அதன் மூலம் ஏதும் விபத்துக்கள் இடம்பெற்றால் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சம்பவங்கள் தொடர்பாக உரிமைக்கோரிக்கை விடுப்பவர் சட்டப்படி செலுத்த வேண்டியேற்படுகின்ற உரிமைக்கோரிக்கை கட்டணம் மற்றும் செலவுகள் உட்பட அனைத்து பணத் தொகைகளுக்கும் கம்பனியினால் இந்த காப்புறுதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பொறுப்பின் வரையறைகளுக்கு உட்பட்டு நட்டஈடு செலுத்தப்படும்:

   (அ) எவரேனும் ஒருவர் மரணித்தல் அல்லது அவருக்கு ஏற்படுகின்ற உடற்காயங்கள். மேற்படி மரணம் அல்லது காயம் காப்புறுதி செய்யப்பட்டவரின் கீழ் வேலையில் ஈடுபட்டிருக்கும் போது அல்லது அந்த உத்தியோகத்தின் காரணமாக ஏற்பட்டிருந்தால், அது தவிர்க்கப்படுவதுடன், மேற்படி மோட்டார் வாகனத்தில் பயணிக்கின்ற ஒரு பயணி அல்லது காப்புறுதி செய்யப்பட்டவரின் ஒரு குடும்ப அங்கத்தவரான ஓர் ஆள் தொடர்பிலான பொறுப்பும் தவிர்க்கப்படும்.

   (ஆ) காப்புறுதி செய்யப்பட்டவரின் அல்லது காப்புறுதி செய்யப்பட்டவரது குடும்ப அங்கத்தவர் ஒருவருடைய பொறுப்பில் அல்லது கட்டுப்பாட்டில் இருக்கின்ற ஆதனம் அல்லது அவர்களது வாகனங்களில் கொண்டு செல்லப்படுகின்ற ஆதனங்கள் தவிர ஏனைய சொத்துக்களுக்கு ஏற்படுகின்ற சேதங்கள்.

2. கம்பனியின் எழுத்துமூல அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப்பட்ட செலவுகள் கம்பனியால் செலுத்தப்படும்.

3. இந்தப் பிரிவின் மூலம் வழங்கப்பட்டுள்ள காப்புறுதி செய்யப்பட்டவருக்கு நட்டஈடு வழங்கும் வரையறைகளுக்கு உட்பட்டு மற்றும் அதற்கிணங்க கம்பனியால் அந்த வாகனத்தை செலுத்துகின்ற எவரேனும் ஒருவருக்கு அவர் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களைப் பூர்த்தி செய்திருப்பின் நட்டஈடு வழங்கப்படும்:

   (அ) அவர் வேறேதும் ஒரு காப்புறுதியின் கீழ் நட்டஈட்டைப் பெற்றுக் கொள்ளும் உரிமை அற்றவராக இருத்தல் வேண்டும்.

   (ஆ) அவர் காப்புறுதி செய்யப்பட்டவரைப் போன்று காப்புறுதிப்பத்திர நியதிகளுக்கும் விதிவிலக்குகளுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்கி அதனை பின்பற்றுபவராக இருத்தல் வேண்டும்.

4. காப்புறுதி செய்யப்பட்டவருக்கு உரிமையில்லாத மற்றும் வாடகைக் கொள்வனவு ஒப்பந்தத்தின் கீழ் வாடகைக்கு பெற்றுக் கொள்ளப்பட்டிருக்காத தனியார் மோட்டார் வாகன வகையைச் சார்ந்த (எனினும் மோட்டார் சைக்கிள் அல்ல) இந்த அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள எந்தவொரு மோட்டார் வாகனத்தையும் காப்புறுதி செய்யப்பட்டவர் தானே ஓட்டிச் செல்கின்ற பொழுது இந்தப் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள நட்டஈடு வழங்கும் வரையறைகளுக்கு உட்பட்டு கம்பனியினால் நட்டஈடு வழங்கப்படும்.

5. இந்தப் பிரிவின் கீழ் நட்டஈடு பெற்றுக் கொள்ளும் உரிமையுள்ள எவரேனும் ஓர் ஆள் மரணித்தால் அந்த நபரினால் பொறுப்பேற்கப்பட்ட பொறுப்புக்கள்

தொடர்பாக அவரது தனிப்பட்ட பிரதிநிதிகளுக்கு, அவர்கள் காப்புறுதி செய்யப்பட்டவரைப் போன்று இந்தக் காப்புறுதிப்பத்திரத்தின் நியதிகள், விதிவிலக்குகள் மற்றும் நிபந்தனைகள் ஏற்புடையதாகும் காலமெல்லாம் அதனைப் பின்பற்றி, நிறைவேற்றி மற்றும் அதற்கு உட்பட்டு இருந்தால் இந்தப் பிரிவின் நியதிகள் மற்றும் எல்லைகளுக்கு உட்பட்டு தனிப்பட்ட பிரதிநிதிகளுக்கு நட்டஈடு வழங்கப்படும்.

6. இந்தப் பிரிவின் கீழ் நட்டஈடு வழங்கும் விடயமாக இருக்கக்கூடிய ஏதும் மரணம் தொடர்பில் நடாத்தப்படுகின்ற ஏதும் மரண விசாரணையின் போது கம்பனிக்கு அதன் தன்துணிவுக்கு இணங்க முகவர்களை நியமித்துக் கொள்ள முடிவதுடன், இந்தப் பிரிவின் கீழ் நட்டஈடு வழங்கும் விடயமாக இருக்கக்கூடிய ஏதும் ஒரு நிகழ்வு காரணமாக அல்லது அது தொடர்பான ஒரு செயல் அல்லது ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்ற ஒரு தவறு தொடர்பாக ஏதும் நீதவான் நீதிமன்றத்தில் அல்லது அடிப்படை நீதிமன்றமொன்றில் நடாத்தப்படுகின்ற வழக்கில் பிரதிவாதியை காத்துக் கொள்வதற்கான செயற்பாடுகளை ஏற்றுக் கொள்ளலாம்.

| பொறுப்புக்களின் எல்லைகள் |
|---|
| தனியார் கார்<br>2 (அ) பிரிவின் கீழ் கம்பனியின் பொறுப்பின் எல்லை<br>1. (அ) எல்லையற்றது<br>2 (அ) பிரிவின் கீழ் கம்பனியின் பொறுப்பின் எல்லை<br>1. (ஆ) ஒரு நிகழ்வினால் ஏற்படுகின்ற ஓர் உரிமைக்கோரிக்கை அல்லது பல உரிமைக் கோரிக்கைகள் தொடர்பான ஆகக்கூடிய பொறுப்பின் எல்லை ரூபா 15 மில்லியன்களாகும். |

(ஆ) மோட்டார் சைக்கிள்களுக்கு மாத்திரம் ஏற்புடையதாகும்

1. மேற்படி அட்டவணையில்/ அட்டவணைகளில் விபரிக்கப்பட்டுள்ள ஏதும் ஒரு மோட்டார் சைக்கிளால் அல்லது அந்த வாகனம் தொடர்புபட்ட அல்லது அதன் மூலம் ஏதும் விபத்துக்கள் இடம்பெற்றால் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சம்பவங்கள் தொடர்பாக உரிமைக்கோரிக்கை விடுப்பவர் சட்டப்படி செலுத்த வேண்டியேற்படுகின்ற உரிமைக்கோரிக்கை கட்டணம் மற்றும் செலவுகள் உட்பட அனைத்து பணத் தொகைகளுக்கும் கம்பனியினால் இந்த காப்புறுதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பொறுப்பின் வரையறைகளுக்கு உட்பட்டு நட்டஈடு செலுத்தப்படும்:

   (அ) எவரேனும் ஒருவர் மரணித்தல் அல்லது அவருக்கு ஏற்படுகின்ற உடற்காயங்கள். மேற்படி மரணம் அல்லது காயம் காப்புறுதி செய்யப்பட்டவரின் கீழ் வேலையில் ஈடுபட்டிருக்கும் போது அல்லது அந்த உத்தியோகத்தின் காரணமாக ஏற்பட்டிருந்தால், அது தவிர்க்கப்படுவதுடன், மேற்படி மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் செல்கின்ற எவரேனும் ஒருவர் ஒரு சேவை ஒப்பந்தத்தின் காரணமாக கொண்டு செல்லப்பட்டிருந்தால் இது ஏற்புடையதாகாது.

   (ஆ) காப்புறுதி செய்யப்பட்டவரின் அல்லது காப்புறுதி செய்யப்பட்டவரது குடும்ப அங்கத்தவர் ஒருவருடைய பொறுப்பில் அல்லது கட்டுப்பாட்டில் இருக்கின்ற ஆதனம் அல்லது அவர்களது மோட்டார் சைக்கிளில் கொண்டு செல்லப்படுகின்ற ஆதனங்கள் தவிர ஏனைய சொத்துக்களுக்கு ஏற்படுகின்ற சேதங்கள்.

2. கம்பனியின் அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப்பட்ட செலவுகள் கம்பனியால் செலுத்தப்படும்.

3. காப்புறுதி செய்யப்பட்டவருக்கு உரிமையில்லாத மற்றும் வாடகை ஒப்பந்தத்தின் கீழ் அவருக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருக்காத தனியார் மோட்டார் சைக்கிள் வகையை சார்ந்த இந்த அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள எந்தவொரு மோட்டார் சைக்கிளையும் காப்புறுதி செய்யப்பட்டவர் தானே செலுத்துகையில் இந்தப் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள நட்டஈட்டு எல்லைகளுக்கு உட்பட்டு கம்பனியினால் நட்டஈடு செலுத்தப்படும்.

4. இந்தப் பிரிவின் கீழ் நட்டஈடு பெற்றுக் கொள்ளும் உரிமையுள்ள எவரேனும் ஒருவர் மரணித்தால் அந்த நபரினால் பொறுப்பேற்கப்பட்ட பொறுப்புக்கள் தொடர்பாக அவரது தனிப்பட்ட பிரதிநிதிகளுக்கு, அவர்கள் காப்புறுதி செய்யப்பட்டவரைப் போன்று இந்தக் காப்புறுதிப்பத்திரத்தின் நியதிகள், விதிவிலக்குகள் மற்றும் நிபந்தனைகள் ஏற்புடையதாகும் காலமெல்லாம் அதனைப் பின்பற்றி, நிறைவேற்றி மற்றும் அதற்கு உட்பட்டு இருந்தால் இந்தப் பிரிவின் நியதிகள் மற்றும் எல்லைகளுக்கு உட்பட்டு தனிப்பட்ட பிரதிநிதிகளுக்கு நட்டஈடு வழங்கப்படும்.

| பொறுப்புக்களின் எல்லைகள் |
|---|
| மோட்டர் சைக்கிள்கள்<br>2 (ஆ) பிரிவின் கீழ் கம்பனியின் பொறுப்பின் எல்லை<br>1. (அ) எல்லையற்றது<br>2 (ஆ) பிரிவின் கீழ் கம்பனியின் பொறுப்பின் எல்லை<br>1. (ஆ) ஒரு நிகழ்வினால் ஏற்படுகின்ற ஓர் உரிமைக் கோரிக்கை அல்லது பல உரிமைக் கோரிக்கைகள் தொடர்பான ஆகக்கூடிய பொறுப்பின் எல்லை ரூபா பதினையாயிரம் (15,000.00) |

(இ) தனியார் கார், மோட்டார் சைக்கிள்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து வாகனங்களுக்கும் ஏற்புடையதாகும்

1. காப்புறுதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பொறுப்புக்களின் வரையறைகளுக்குட்பட்டு கீழ்வரும் விடயங்கள் தொடர்பில் கொடுப்பனவு மேற்கொள்வதற்கு காப்புறுதி செய்யப்பட்டவர் பொறுப்பாக இருக்கின்ற உரிமைக்கோரிக்கை விடுப்பவரின் செலவுகள் மற்றும் கட்டணங்கள் உட்பட அனைத்து செலவுகளையும் கம்பனியால் காப்புறுதி செய்யப்பட்டவருக்கு நட்டஈடாக வழங்கப்படும்.

   (i) இங்கு அட்டவணையில் (களில்) விபரிக்கப்பட்டுள்ள ஏதும் ஒரு வாகனத்தின் காரணமாக அல்லது அதன் மூலம் அல்லது அதனை பாவிப்பதன் மூலம் (அந்த வாகனத்தை ஏற்றுதல், இறக்குதல் உட்பட) எவரேனும் ஒருவருக்கு ஏற்படுகின்ற மரணம் அல்லது உடற்காயம்.

   (ii) இங்கு அட்டவணையில் (களில்) விபரிக்கப்பட்டுள்ள ஏதும் ஒரு வாகனத்தை பாவிப்பதன் மூலம் (அந்த வாகனத்தை ஏற்றுதல், இறக்குதல் உட்பட) சொத்துக்களுக்கு ஏற்படுகின்ற சேதம்.

கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் கம்பனி பொறுப்புக் கூறாது:

(அ) மேற்படி வாகனங்களில் ஏற்றுவதற்காக பொருட்களை எடுத்து வருதல் அல்லது மேற்படி வாகனங்களில் இருந்து அவற்றை இறக்கியதன் பின்னர் அகற்றுதலுடன் தொடர்புடைய வாகன வழி அல்லது பொது வீதிகளின் எல்லைகளை மீறிச் செல்வதன் காரணமாக அல்லது அதன் மூலம் ஏற்படுகின்ற மரணம், காயம் அல்லது சேதம்:

ஆ) காப்புறுதி செய்யப்பட்டவரின் கீழ் கடமையாற்றிக் கொண்டிருக்கையில் அந்த உத்தியோகம் காரணமாக எவரேனும் ஒருவருக்கு ஏற்படுகின்ற மரணம் அல்லது உடற் காயங்கள்:

(இ) அந்த வாகனத்திற்குள் அல்லது அதன் மீது கொண்டு செல்லப்படுகின்ற அல்லது உரிமைக்கோரிக்கை சமர்ப்பிக்கப்பட முடிகின்ற நிகழ்வு ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் அந்த வாகனத்தில் ஏறுதல் அல்லது இறங்குதலின் போது எவரேனும் ஒருவருக்கு (சேவை ஒப்பந்தம் காரணமாக கொண்டு செல்லப்படுகின்ற ஆள் தவிர) ஏற்படுகின்ற மரணம் அல்லது உடற் காயங்கள்.

(ஈ) காப்புறுதி செய்யப்பட்டவரின் அல்லது காப்புறுதி செய்யப்பட்டவரின் ஒரு குடும்ப அங்கத்தவரது பொறுப்பில், பாதுகாப்பில் அல்லது கட்டுப்பாட்டில் இருக்கின்ற அல்லது அந்த வாகனத்தின் மூலம் கொண்டு செல்லப்படுகின்ற சொத்துக்களுக்கு ஏற்படுகின்ற சேதம்:

(உ) ஏதும் ஒரு பாலத்துக்கு அல்லது நிறுக்கும் பாலத்துக்கு அல்லது viaduct வீதிக்கு அல்லது ஏதேனும் ஒரு பாதைக்கு அல்லது அதன் கீழுள்ள ஏதும் ஒரு விடயத்துக்கு வாகனத்தில் கொண்டு செல்லப்படுகின்ற சுமை காரணமாக அல்ல அதன் அதிர்வின் காரணமாக ஏற்படுகின்ற ஏதும் சேதங்கள்:

(ஊ) மேற்படி வாகனத்திலிருந்து வெளியாகின்ற தீப்பொறிகள் அல்லது சாம்பல் அல்லது அந்த வாகனத்திலுள்ள பொய்லர் வெடித்தல் காரணமாக ஏற்படுகின்ற சொத்து சேதங்கள்:

(எ) அந்த வாகனத்திலுள்ள பொய்லர் வெடித்தல் காரணமாக அல்லது அதன் மூலம் ஏற்படுகின்ற மரணம் அல்லது உடற் காயம்: மேற்படி மரணம் அல்லது காயம் இந்த அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஒரு பொது வீதியில் மேற்படி வாகனத்தை செலுத்துதல் காரணமாக அல்லது அதன் மூலம் ஏற்பட்டிருந்தால் இந்த விதிவிலக்கு ஏற்புடையதாகாது.

2. கம்பனியின் எழுத்துமூல அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து செலவுகளும் கம்பனியால் செலுத்தப்படும்.

3. இந்தப் பிரிவின் மூலம் வழங்கப்பட்டுள்ள காப்புறுதி செய்யப்பட்டவருக்கு நட்டஈடு வழங்கும் வரையறைகளுக்கு உட்பட்டு மற்றும் அதற்கிணங்க கம்பனியால் அந்த வாகனத்தை செலுத்துகின்ற எவரேனும் ஓர் ஆளுக்கு அவர் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களைப் பூர்த்தி செய்திருப்பின் நட்டஈடு வழங்கப்படும்:

(அ) அவர் வேறேதும் ஒரு காப்புறுதியின் கீழ் நட்டஈட்டைப் பெற்றுக் கொள்ளும் உரிமை அற்றவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) அவர் காப்புறுதி செய்யப்பட்டவரைப் போன்று காப்புறுதிப்பத்திர நியதிகளுக்கும் விதிவிலக்குகளுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்கி அதனை பின்பற்றுபவராக இருத்தல் வேண்டும்.

4. இந்தப் பிரிவின் கீழ் நட்டஈடு பெற்றுக் கொள்ளும் உரிமையுள்ள எவரேனும் ஒருவர் மரணித்தால் அந்த நபரினால் பொறுப்பேற்கப்பட்ட பொறுப்புக்கள் தொடர்பாக அவரது தனிப்பட்ட பிரதிநிதிகளுக்கு, அவர்கள் காப்புறுதி செய்யப்பட்டவரைப் போன்று இந்தக் காப்புறுதிப்பத்திரத்தின் நியதிகள், விதிவிலக்குகள் மற்றும் நிபந்தனைகள் ஏற்புடையதாகும் காலமெல்லாம் அதனைப் பின்பற்றி, நிறைவேற்றி மற்றும் அதற்கு உட்பட்டு இருந்தால் இந்தப் பிரிவின் நியதிகள் மற்றும் எல்லைகளுக்கு உட்பட்டு தனிப்பட்ட பிரதிநிதிகளுக்கு நட்டஈடு வழங்கப்படும்.

5. இந்தப் பிரிவின் கீழ் நட்டஈடு வழங்கும் விடயமாக இருக்கக்கூடிய ஏதும் மரணம் தொடர்பில் நடாத்தப்படுகின்ற ஏதும் மரண விசாரணையின் போது கம்பனிக்கு அதன் தன்துணிவுக்கு இணங்க முகவர்களை நியமித்துக் கொள்ள முடிவதுடன், இந்தப் பிரிவின் கீழ் நட்டஈடு வழங்கும் விடயமாக இருக்கக்கூடிய ஏதும் ஒரு நிகழ்வு காரணமாக அல்லது அது தொடர்பான ஒரு செயல் அல்லது ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்ற ஒரு தவறு தொடர்பாக ஏதும் நீதவான் நீதிமன்றத்தில் அல்லது அடிப்படை நீதிமன்றமொன்றில் நடாத்தப்படுகின்ற வழக்கில் பிரதிவாதத்தை ஏற்றுக் கொள்ளலாம்.

பொறுப்புக்களின் எல்லைகள்

தனியார் கார், மோட்டார் சைக்கிள்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து வாகனங்களும்

2 (இ) பிரிவின் கீழ் கம்பனியின் பொறுப்பின் எல்லை
1. (அ) எல்லையற்றது
2 (இ) பிரிவின் கீழ் கம்பனியின் பொறுப்பின் எல்லை
1. (ஆ) ஒரு நிகழ்வினால் ஏற்படுகின்ற ஓர் உரிமை க்கோரிக்கை அல்லது பல உரிமைக் கோரிக்கைகள் தொடர்பான ஆகக்கூடிய பொறுப்பின் எல்லை ரூபா பதினையாயிரம் (15,000.00)

## பிரிவு 3 : மருத்துவ செலவுகள்
## (தனியார் கார்களுக்கு மாத்திரம் ஏற்புடையது)
## (MEDICAL EXPENSES – APPLICABLE TO PRIVATE CARS ONLY)

மூர்க்கத்தனமானதும், வெளிவாரியானதும், கற்புலனாகின்றதுமான ஒரு விபத்தின் விளைவாக காப்புறுதி செய்யப்பட்டவருக்கு அல்லது மேற்படி அட்டவணையில் (அட்டவணைகளில்) விபரிக்கப்பட்டுள்ள ஏதும் மோட்டார் காருக்குள் இருந்த எவரேனும் ஒருவருக்கு ஏதும் உடற்காயங்கள் ஏற்பட்டால் நியாயமான மருத்துவ செலவுகளைக் கம்பனி காப்புறுதி செய்யப்பட்டவருக்கு செலுத்தும். சம்பளம் பெறும் சாரதி மற்றும் /அல்லது நடத்துநர் மற்றும்/அல்லது சுத்தம் செய்பவருக்கு மேற்படி மோட்டார் கார் விபத்துக்குள்ளானதன் உடனடுத்த நேரடி விளைவினால் காயங்கள் ஏற்பட்டால் இந்தப் பிரிவின் கீழ் ஏதும் ஒரு விபத்து தொடர்பாக செலுத்தும் மொத்த நட்டஈட்டுத் தொகை ரூபா 1,500/- க்கு மட்டுப்படுத்தப்பட்டு செலுத்தப்படும்.

## அறவிடும் சில நியதிகள் மற்றும் உரிமைகளை தவிர்த்தல்
## (AVOIDANCE OF CERTAIN TERMS AND RIGHTS OF RECOVERY)

இந்தக் காப்புறுதிப்பத்திரத்தின் அல்லது அதில் அடங்கியுள்ள எந்த ஒரு ஷரத்தும் 1951 ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க மோட்டார் வாகன போக்குவரத்து சட்டத்தின் 102 மற்றும் 105 ஆம் பிரிவுகள் மற்றும் தொடர்ந்து வந்த திருத்தங்கள் ஆகியவற்றின் ஏற்பாடுகளுக்கு இணங்க அல்லது ஏற்பாடுகளின் கீழ், இந்தக் காப்புறுதி மூலம் நட்டஈடு வழங்கப்பட்டுள்ள எவரேனும் ஒரு ஆளின் அல்லது வேரேதும் ஒரு ஆளின் அறவிட்டுக் கொள்வதற்கான உரிமைக்கு பாதிப்பை ஏற்படுத்தாது.

எனினும், கம்பனி செலுத்த வேண்டியிராத ஆயினும் மேற்படி ஏற்பாடுகளுக்காக மற்றும் இணக்கத்தினாலும் தவறுகையினாலும் கம்பனி செலுத்த வேண்டியேற்படுகின்ற தொகையினை கம்பனி செலுத்தியிருந்தால் அதனை காப்புறுதி செய்யப்பட்டவர் கம்பனிக்கு மீள செலுத்துதல் வேண்டும்.

## நட்டஈட்டு வரையறையைப் பிரயோகித்தல்
## (APPLICATION OF LIMITS OF INDEMNITY)

(தனியார் கார், மோட்டார் சைக்கிள்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து வாகனங்களுக்கும் ஏற்புடையதாகும்)

ஒன்றுக்கு மேற்பட்ட ஆட்களுக்கு நட்டஈடு வழங்கவேண்டியேற்படுகின்ற ஏதும் விபத்துக்கள் இடம் பெற்றால் இந்த காப்புறுதிப்பத்திர நியதிகளினால் மற்றும்/அல்லது இதிலுள்ள நட்டஈட்டு அளவு பற்றிய ஏதும் ஷரத்துகளினால் ஏதும் வரையறைகள் விதிக்கப்பட்டிருப்பின் அது நட்டஈடு வழங்கப்படுகின்ற அனைத்து ஆட்களுக்கும் சராசரி வீதத்தில் (aggregate amount) பிரயோகிக்கப்படுவதுடன் மேற்படி நட்டஈட்டுக்கு காப்புறுதி செய்யப்பட்டவர் முன்னுரிமை பெறுவார்.

# பொதுவான விதிவிலக்குகள்
## (GENERAL EXCEPTIONS)

(அனைத்து வாகனங்களுக்கும் ஏற்புடையதாகும்)

பின்வரும் சந்தர்ப்பங்களில் கம்பனி இந்தக் காப்புறுதிப்பத்திரத்தின் கீழ் நட்டஈடு வழங்க மாட்டாது:

1. சம்பவம் இடம்பெற்று 24 மணித்தியாலங்களுக்குள் கம்பனிக்கு அறிவிக்கப்படாத ஏதும் விபத்து, இழப்பு, சேதம் மற்றும் / அல்லது ஏற்பட்ட, நிறைவேற்றப்பட்ட பொறுப்புக்கள்.

2. இலங்கை நில எல்லைக்கு வெளியே இடம்பெற்ற, ஏற்பட்ட அல்லது நிகழ்ந்த ஏதும் விபத்துக்கள், இழப்புக்கள் அல்லது சேதங்கள் மற்றும் அல்லது பொறுப்புக்கள்

3. ஏதும் ஒப்பந்தம் சார்ந்த பொறுப்புக்களில் இருந்து ஏற்பட்ட ஏதும் உரிமைக்கோரிக்கைகள். எனினும் மேற்படி ஒப்பந்தம் இல்லாதவிடத்து பொறுப்புக்கள் ஏற்படாது.

4. இந்தக் காப்புறுதிப்பத்திரத்தின் கீழ் காப்பீடு வழங்கப்பட்டுள்ளவற்றுடன் தொடர்புடைய அல்லது அது சம்பந்தமான ஏதும் ஒரு மோட்டார் வாகனம்,

(அ) தற்போதைய மோட்டார் வாகனக் காப்புறுதிப்பத்திரத்தின் மூலம் அனுமதிக்கப்பட்டிராத ஏதும் நோக்கத்திற்காக பாவிக்கப்பட்டுக் கொண்டிருக்கையில்,

(ஆ) தற்போதைய மோட்டார் வாகனக் காப்புறுதிப் பத்திரத்தின் மூலம் அனுமதிக்கப்பட்டிராத எவரேனும் ஒரு நபரினால் செலுத்தப்பட்டுக் கொண்டிருக்கையில்,

ஏற்பட்ட, இடம்பெற்ற அல்லது நிகழ்ந்த ஏதும் விபத்து, இழப்பு அல்லது சேதம் மற்றும் பொறுப்புக்கள்.

5. பின்வருவனவற்றுடன் நேரடியாக, அல்லது மறைமுகமாக, அண்ணளவாக அல்லது தூரமாக ஏற்பட்ட, அவை பங்களிப்புச் செய்துள்ள அல்லது அவை தொடர்புபட்டதனால் ஏற்பட்ட ஏதும் விபத்து, இழப்பு சேதம் மற்றும்/அல்லது பொறுப்புக்கள்.

(அ) யுத்தம், ஆக்கிரமிப்பு, வெளிநாட்டு எதிரிகளின் செயற்பாடு, பகைமைச் செயற்பாடுகள் அல்லது (யுத்தம் பிரகடனம் செய்யப்பட்டிருந்தாலும் இல்லாவிட்டாலும்) யுத்தம் போன்ற செயற்பாடுகள், சிவில் யுத்தம், கலகம், கிளர்ச்சி, இராணுவ அல்லது பலாத்கார அதிகார அபகரிப்பு

(ஆ) பணிப்புறக்கணிப்பு, கலகம், மக்கள் கொந்தளிப்பு

(இ) தடுத்துவைத்தல், கைப்பற்றல், அரசுடைமையாக்கல் அல்லது பயமுறுத்தல் முயற்சி

(ஈ) வெள்ளப்பெருக்கு, புயல், சண்டமாருதம், சூறாவளி, அல்லது வேறேதும் வளிமண்டல சீர்குலைவு, எரிமலை வெடித்தல், பூமியதிர்வு அல்லது ஏனைய இயற்கை அனர்த்தங்கள் அல்லது மேற்கூறப்பட்ட ஏதும் நிகழ்வுகளின் நேரடியான அல்லது மறைமுகமான பின்விளைவுகள். இதன் கீழ் ஏதும் உரிமைக்கோரிக்கைகள் விடுக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் விபத்து, இழப்பு, சேதம் மற்றும்/அல்லது பொறுப்பானது பிரத்தியேகமாகவும் மேற்கூறப்பட்டவற்றுடன் தொடர்புபடாத வகையிலும் ஏற்படவில்லை என்பதையும் அல்லது அவற்றினால் ஏற்படவில்லை அல்லது அவை பங்களிப்புச் செய்யவில்லை அல்லது அவற்றுடன் சம்பந்தப்பட்டிருக்கவில்லை என்பதையும் அவற்றின் பின்விளைவாக ஏற்படவில்லை என்பதையும் காப்புறுதி செய்யப்பட்டவர் உறுதிப்படுத்துதல் வேண்டும். அவ்வாறு செய்யத் தவறும்பட்சத்தில் மேற்படி உரிமைக்கோரிக்கை தொடர்பாக கம்பனி எந்தக் கொடுப்பனவையும் மேற்கொள்ளாது.

6. மேற்படி வாகனத்தை செலுத்தும் போது மேற்படி வாகனத்தின் சாரதி மதுபானம் அல்லது ஏதும் போதைப்பொருள் பாவித்ததன் நேரடி அல்லது மறைமுக விளைவினால் ஏற்பட்ட விபத்து அல்லது இழப்பு அல்லது சேதம்.

7. (அ) எந்தவொரு சந்தர்ப்பத்திலேனும் சொத்துக்கு ஏற்படுகின்ற ஏதும் விபத்துச் சேதம் அல்லது இழப்பு அல்லது அதன் மூலம் ஏற்படுகின்ற அல்லது அதன் பின்விளைவு இழப்பு

(ஆ) அயனாக்கல், கதிரியக்கம், ஏதும் அணு எரிபொருள் மூலம் ஏற்படுகின்ற கதிர் மாசடைதல் அல்லது கதிர்வீச்சு மாசடைதல், அல்லது அணு எரிபொருள் தகனம் மூலம் ஏற்படுகின்ற ஏதும் அணு மாசடைதல். இந்த விதிவிலக்கின் நோக்கத்துக்காக தகனம் என்பதில் அணு வெடித்தலும் உள்ளடக்கப்படும்.

## நிபந்தனைகள் (CONDITIONS)

1. காப்புறுதிப்பத்திரம், அட்டவணை மற்றும் மோட்டார் வாகனக் காப்புறுதியின் தற்போதைய சான்றிதழ் ஆகிய அனைத்தும் ஒரே ஒப்பந்தமாகக் கருதப்பட்டு வாசிக்கப்பட வேண்டும் என்பதுடன், அங்கு ஏதேனும் ஓரிடத்தில் ஏதேனும் ஒரு சொல் அல்லது ஏதேனும் ஒரு பிரயோகம் விசேட பொருளின் கீழ் பாவிக்கப்பட்டிருப்பின் அந்த சொல் அல்லது பிரயோகம் பாவிக்கப்பட்டுள்ள எல்லா இடங்களிலும் அதே பொருளைக் கொண்டிருக்கும்.

2. ஏதும் ஒரு விபத்து அல்லது இழப்பு அல்லது சேதம் ஏற்பட்டால் மற்றும் ஏதும் உரிமைக்கோரிக்கை தொடர்பில் உடனடியாக கம்பனிக்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டும். காப்புறுதி செய்யப்பட்டவருக்கு கிடைக்கின்ற கடிதங்கள், ரிட் ஆணைகள், அழைப்பாணை என்பன அது கிடைத்தவுடன் அதனை உடனடியாக கம்பனிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். இந்த காப்புறுதிப்பத்திரத்தின் கீழ் உரிமைக்கோரிக்கை விடுக்கப்படக்கூடிய ஏதும் ஒரு நிகழ்வு தொடர்பில் ஏதும் வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளதாக காப்புறுதி செய்யப்பட்டவர் அறிந்திருப்பின் அது தொடர்பாக கம்பனிக்கு அறிவித்தல் வேண்டும். இந்தக் காப்புறுதிப்பத்திரத்தின் கீழ் உரிமைக்கோரிக்கை சமர்ப்பிக்கப்படக்கூடிய ஒரு திருட்டு அல்லது வேறேதும் குற்றச் செயல்கள் இடம்பெற்றிருப்பின் அது தொடர்பில் உடனடியாக பொலிசுக்கு அறிவிக்க வேண்டியதுடன் குற்றவாளிக்கு தண்டனை பெற்றுக் கொடுப்பதில் ஒத்துழைப்பு வழங்கவும் வேண்டும்.

3. ஒரு விபத்து அல்லது இழப்பு அல்லது சேதம் ஏற்பட்டு 14 நாட்களுக்குள் காப்புறுதி செய்யப்பட்டவரால் கம்பனிக்கு பூரணப்படுத்தப்பட்ட உரிமைக்கோரிக்கை படிவம் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன், மேற்படி விபத்து அல்லது இழப்பு அல்லது சேதம் தொடர்பான ஏனைய ஆவணங்களை முப்பது (30) நாட்களுக்குள் சமர்ப்பித்தல் வேண்டும்.

4. (அ) கம்பனியின் எழுத்துமூல இணக்கமின்றி காப்புறுதி செய்யப்பட்டவரால் அல்லது காப்புறுதி செய்யப்பட்டவர் சார்பில் எந்தவொரு வாக்குறுதியை வழங்கவோ அல்லது கொடுப்பனவை மேற்கொள்ளவோ அல்லது நட்டஈட்டைப் பொறுப்பேற்கவோ கூடாது. காப்புறுதி செய்யப்பட்டவரின் பெயரில் ஒரு பிரதிவாதத்தை மேற்கொள்ளவோ அல்லது உரிமைக்கோரிக்கை செலுத்துவதைப் பொறுப்பேற்கவோ அதனை நடைமுறைப்படுத்தவோ அல்லது கம்பனியின் நலன் கருதி ஏதும் நட்டஈட்டை அல்லது இழப்புக்கான, வேறொரு நோக்கத்துக்கான ஏதும் உரிமைக்கோரிக்கைக்காக காப்புறுதி செய்யப்பட்டவரின் பெயரில் சட்ட நடவடிக்கை எடுக்க விரும்பின், அவ்வாறு செய்வதற்கான உரிமை கம்பனிக்கு மாத்திரமே உண்டு. இது தொடர்பில் கம்பனிக்குத் தேவையான அனைத்து தகவல்களையும் ஒத்துழைப்பையும் கம்பனிக்கு வழங்குதல் வேண்டும்.

(ஆ) இந்தக் காப்புறுதிப்பத்திரத்தில் மோட்டார் சைக்கிளாயின் 2 (ஆ) பிரின் 1 (ஆ) அல்லது தனியார் கார் அல்லது மோட்டார் சைக்கிள் அல்லாத ஒரு வாகனமாயின் 2 (இ) ஆம் பிரிவின் 1 (ii) ஆம் உப பிரிவின் கீழ் ஓர் உரிமைக்கோரிக்கையை அல்லது உரிமைக்கோரிக்கைகள் பலவற்றை சமர்ப்பிக்க முடியுமான ஒரு நிகழ்வு இடம் பெற்றதன் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலேனும் மேற்படி உப பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கம்பனியின் பொறுப்பின் முழுத் தொகையையும் காப்புறுதி செய்யப்பட்டவர் கம்பனிக்கு செலுத்தி ஏதும் பிரதிவாதத்தை அல்லது தீர்த்து வைத்தலை அல்லது சட்டநடவடிக்கையை மேற்கொள்வதை விட்டுவிட முடியும் என்பதுடன், அவ்வாறான பிரதிவாதத்தை அல்லது தீர்த்து வைத்தலை அல்லது நீதிமன்ற நடவடிக்கையை மேற்கொள்வதை கம்பனி விட்டுவிடுவதனால் ஏற்படுகின்ற ஒரு பின்விளைவாக அல்லது அந்த நடவடிக்கையை கம்பனி விட்டுவிடுவதனால் காப்புறுதி செய்யப்பட்டவருக்கு ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்ற ஏதும் இழப்புக்காக கம்பனி பொறுப்புக் கூற மாட்டாது, அவ்வாறே கம்பனி அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்வதை விட்டுவிடுவதனால் காப்புறுதி செய்யப்பட்டவரால் அல்லது வேறெவரேனும் உரிமைக்கோரிக்கை விடுப்பவரால் மேற்கொள்ளப்பட்ட ஏதும் சட்ட செலவு அல்லது கட்டணம் தொடர்பாகவும் கம்பனி பொறுப்புக் கூற மாட்டாது.

5. கம்பனி தனது தனிப்பட்ட விருப்பத்துக்கு இணங்க இந்த அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஏதும் மோட்டார் வாகனத்தை அல்லது அதன் ஒரு பாகத்தை அல்லது உதிரிப் பாகத்தை திருத்துவதற்கு, மீளமைப்பதற்கு அல்லது புணரமைப்பதற்கு அல்லது இழப்பின் அல்லது சேதத்தின் அளவை பணத்தால் செலுத்துவதற்கு விழையலாம். அப்போது கம்பனியின் பொறுப்பானது எக் காரணம் கொண்டும் இழப்புக்கு அல்லது சேதத்துக்கு முகம் கொடுத்த பாகத்தின் உண்மையான விலை மற்றும் அதனைப் பொருத்துவதற்கான உண்மையான செலவை தாண்ட மாட்டாது என்பதுடன், அந்த அட்டவணையில்

விபரிக்கப்பட்டுள்ள (பாகங்கள் மற்றும் உதிரிப் பாககங்கள் அடங்கலாக) அந்த வாகனம் தொடர்பான காப்புறுதி செய்யப்பட்டவரின் மதிப்பிடப்பட்டுள்ள பெறுமதி அல்லது இழப்பு அல்லது சேதம் ஏற்படுகின்ற சமயத்தில் (பாகங்கள் மற்றும் உதிரிப் பாககங்கள் அடங்கலாக) அந்த வாகனத்தின் விலை ஆகிய இரண்டின் குறைந்த தொகையைத் தாண்ட மாட்டாது. மோட்டார் வாகனத்துக்கு அல்லது அதன் உதிரிப் பாகங்களுக்கு இழப்பு அல்லது சேதம் ஏற்பட்டதன் பின்னர் அந்த வாகனத்துக்காக இலங்கையில் பெற்றுக் கொள்ள முடியாத ஏதும் வாகன உதிரிப் பாகங்களை பெற்றுக் கொள்ளத் தேவைப்பட்டால் அல்லது இழப்பின் அல்லது சேதத்தின் அளவை பணத்தால் செலுத்துவதற்கான தெரிவை பிரயோகிக்க கம்பனி நாடினால் அந்த ஏதும் வாகன பாகத்துக்கான கம்பனியின் பொறுப்பு பின்வரும் வரையறைகளுக்கு உட்பட்டிருக்கும்:

(அ) (i) குறித்த பாகத்தின் உற்பத்தியாளரால் அல்லது இலங்கையிலுள்ள அதன் முகவரால் வழங்கப்பட்டிருக்கின்ற பிந்திய விலைபட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள விலை அல்லது

(ii) அவ்வாறான ஒரு விலைப்பட்டியல் இல்லாவிட்டால் உற்பத்தியாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட விலைப்பட்டியல் மற்றும் வான் அல்லது கடல் மார்க்கமாக அதனை சிறீலங்காவுக்கு கொண்டு வருவதற்கான செலவு மற்றும் அது சம்பந்தமான இறக்குமதி வரி மற்றும்

(ஆ) அந்த பாகத்தை பொருத்துவதற்கு ஏற்படுகின்ற நியாயமான செலவு

6. இதிலுள்ள அட்வணையில் (அட்டவணைகளில்) விபரிக்கப்பட்டுள்ள ஏதும் மோட்டார் வாகனங்களுக்கு இழப்பு அல்லது சேதம் ஏற்படாத வண்ணம் பாதுகாத்துக் கொள்வதற்கான நியாயமான அனைத்து முன்னேற்பாடுகளையும் காப்புறுதி செய்யப்பட்டவர் மேற்கொள்ள வேண்டியதுடன் அதனை பாதையில் ஓட்டக்கூடிய தன்மையிலும் செயல்திறண் மிக்க நிலையிலும் பேணிவர வேண்டியதுடன், அந்த மோட்டார் வாகனத்தை அல்லது அதன் ஏதேனும் ஒரு பாகத்தை, பங்கேற்பாளரின் எவரேனும் சாரதியை, ஊழியரை எல்லா நேரத்திலும் பரிசோதிப்பதற்கு கம்பனிக்கு இடமளிக்கப்படல் வேண்டும். ஏதும் விபத்துக்கள் அல்லது செயலிழப்புக்கள் ஏற்பட்டால், மேலும் இழப்புக்கள் அல்லது சேதங்கள் ஏற்படுவதைத் தடுக்கக்கூடிய முறையான முன்னேற்பாடுகளை மேற்கொள்ளாது யாரும் அற்ற நிலையில் மேற்படி மோட்டார் வானத்தை விட்டுச் செல்லக் கூடாது. தேவையான திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படுவதற்கு முன்னர் அந்த மோட்டார் வாகனம் ஓட்டிச் செல்லப்பட்டால், சேதத்தின் அதிகரிப்பு அல்லது அந்த வாகனத்துக்கு ஏற்படுகின்ற ஏதும் மேலதிக சேதங்களை பங்கேற்பாளரே முழுமையாக பொறுப்பேற்றல் வேண்டும்.

7. இறுதியாக அறியப்பட்ட பங்கேற்பாளரின் முகவரிக்கு பதிவுத்தபாலில் ஏழு (7) நாட்கள் அறிவித்தல் கொடுத்து விட்டு கம்பனி இந்தக் காப்புறுதியை இரத்துச் செய்யலாம். அவ்வாறான சந்தர்பங்களில் காப்புறுதி அமுலில் இருந்த காலத்துக்காக சரிசமவிகித அளவைக் (pro-rata portion) கழித்துக் கொண்டு பங்களிப்புத் தொகையை கம்பனி காப்புறுதி செய்யப்பட்டவருக்கு செலுத்தும். (தற்போதைய காப்புறுதிக் காலப்பகுதியில் உரிமைக்கோரிக்கை எதுவும் விடுக்கப்பட்டிருக்கக் கூடாது என்ற நிபந்தனைக்கு இது உட்படும்) ஏழு (7) நாட்கள் அறிவித்தல் கொடுத்துவிட்டு விரும்பிய நேரம் பங்கேற்பாளரும் காப்புறுதியை இரத்துச் செய்யலாம் என்பதுடன் கம்பனியின் வழமையான குறுகிய கால பரிமாணத்துக்கு (short period scale) இணங்க நிருவாகக் கட்டணம் கழிக்கப்பட்டு பங்களிப்புத் தொகையை மீளப் பெற்றுக் கொள்ளும் உரிமை பங்கேற்பாளருக்கு உண்டு.

8. (அ) இந்தக் காப்புறுதிப்பத்திரத்தில் தனியார் காராயின் 2 (அ) ஆம் பிரிவின் 3 (அ) அல்லது தனியார் கார் அல்லது மோட்டார் சைக்கிள் அல்லாத வாகனமாயின் 2 (அ) ஆம் பிரிவின் 2 (இ) ஆம் உப பிரிவின் கீழ் விடுவிக்கப்பட்டுள்ள இந்த நிபந்தனைக்காகவன்றி, கம்பனி மீது ஒரு பொறுப்பு இந்த நிபந்தனை மூலம் சாட்டப்பட்டிருக்கவில்லை என்பதற்குட்பட்டு இந்தக் காப்புறுதிப்பத்திரத்தின் கீழ் ஏதும் உரிமைக்கோரிக்கை சமர்ப்பிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் மேற்படி இழப்பு, சேதம் அல்லது பொறுப்பை காப்பீடு செய்கின்ற வேறேதும் காப்புறுதிப்பத்திரம் அமுலில் இருந்தால் ஏதும் இழப்பின், சேதத்தின், நட்டஈட்டின், வழக்கு செலவின் அல்லது கட்டணத்தின் சரிசம விகதத்துக்கு மேலதிகமாக பங்களிப்புச் செய்வதற்கு கம்பனி கட்டுப்படவில்லை.

(ஆ) இந்தக் காப்புறுதியின் கீழ் ஏதும் உரிமைக்கோரிக்கைகள் எழுகின்ற சமயத்தில் அதே இழப்பு, சேதம் அல்லது பொறுப்புக்களைக் காப்பீடு செய்கின்ற வேறேதும் காப்புறுதி அமுலில் இருந்தால் கம்பனி இழப்பு, சேதம், நட்டஈட்டு செலவு ஆகியன தொடர்பான கம்பனியின் சரிசமவிகித பங்குக்கு மேலதிகமாக எதனையும் செலுத்த மாட்டாது. (மோட்டார் சைக்கிள்களுக்கு ஏற்புடையதாகும்)

## 9. மத்தியஸ்தம் (ARBITRATION)

ஏதும் இழப்பு அல்லது சேதத் தொகை தொடர்பில் ஏதும் முரண்பாடுகள் (பொறுப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்ற பொழுது) ஏற்பட்டால் அனைத்துவிதமான கேள்விகளிலும் இருந்து சுயாதீனமாக ஒரு மத்தியஸ்தரின் தீர்ப்புக்காக சமர்பிக்கப்படுதல் வேண்டும். மேற்படி மத்தியஸ்தர் கருத்து முரண்பட்டுள்ள இரண்டு தரப்பினராலும் எழுத்தில் நியமிக்கப்பட வேண்டும். அல்லது ஒரு தனி மத்தியஸ்தர் தொடர்பில் அவர்களால் ஓர் இணக்கத்திற்கு வர முடியாது போனால், இதனோடு தொடர்பு இல்லாத இரண்டு மத்தியஸ்தர்களின் தீர்ப்புக்காக அது சமர்ப்பிக்கப்பட வேண்டும். இந்த இருவரில் ஒருவரின் நியமனமானது மற்றைய தரப்பில் அவ்வாறு செய்யக்கோரி எழுத்தில் வேண்டுகோள் விடுக்கப்பட்டு இரண்டு பஞ்சாங்க மாதங்களுக்குள் இரண்டு தரப்பினராலும் நியமித்துக் கொள்ளப்பட வேண்டும். ஒரு நியமனத்தை வேண்டி நிற்கின்ற எழுத்து மூல அறிவித்தல் கிடைத்ததன் பின்னர் இரண்டு பஞ்சாங்க மாதங்களுக்குள் இரண்டில் ஒரு தரப்பு அவ்வாறு நியமிக்க மறுத்தால் அல்லது தவறினால், ஒரு தனி மத்தியஸ்தரை நியமிப்பதற்கான சுதந்திரத்தை மற்றைய தரப்பு பெற்றுக் கொள்ளும். இரண்டு

மத்தியஸ்தர்களுக்குமிடையில் இணக்கம் ஏற்படவில்லையானால், முரண்பாடானது ஒரு நடுவரின் தீர்ப்புக்காக சமர்பிக்கப்பட வேண்டும். மேற்படி நடுவர் இவ் விடயத்தில் தலையிட முன்னர் முறையாக எழுத்தில் நியமிக்கப்பட வேண்டும். இவர் மத்தியஸ்தர்களின் கூட்டங்களில் கலந்து கொள்வதுடன் அவற்றுக்கு தலைமை தாங்குதலும் வேண்டும். மத்தியஸ்தர், மத்தியஸ்தர்கள், அல்லது நடுவர் ஆகியவர்களில் எவரேனும் ஒரு தரப்பினர் மரணித்தால் அவர்களது அதிகாரம் இரத்துச் செய்யப்படவோ அல்லது அதற்கு பாதிப்பு ஏற்படவோ மாட்டாது.

ஒரு மத்தியஸ்தர் அல்லது நடுவர் மரணித்தால் மரணித்த மத்தியஸ்தரை அல்லது நடுவரை நியமித்த தரப்பால் மரணித்த மத்தியஸ்தர் அல்லது நடுவருக்கு பதிலாக இன்னோரு மத்தியஸ்தரை அல்லது நடுவரை அவர்கள் நியமித்தல் வேண்டும். ஆலோசனையினதும் தீர்ப்பினதும் ஆகும் செலவு தீர்ப்பை வழங்குகின்ற மத்தியஸ்தர், மத்தியஸ்தர்கள், அல்லது நடுவரின் தற்றுணிபாகும். இழப்பு அல்லது சேதத்தின் தொகை பற்றி கருத்து முரண்பாடு ஏற்பட்டால் அந்த மத்தியஸ்தர், மத்தியஸ்தர்கள் அல்லது நடுவரினால் வழங்கப்படுகின்ற தீர்ப்பின் பெறுமதி ஆரம்பத்திலேயே பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்பது இந்தக் காப்புறுதி மீது உரிமை தொடர்பான எந்தவொரு சட்ட நடவடிக்கையையும் மேற்கொள்வதற்கு ஒரு முன்-நிபந்தனையாக இருக்கும் என்பது இத்தால் வெளிப்படையாக குறிப்பிடப்பட்டு பிரகடனப்படுத்தப்படுகிறது.

10. இந்தக் காப்புறுதியின் நியதிகள், நிபந்தனைகள், புறக்குறிப்புக்கள் ஷரத்துகள் மற்றும் உத்தரவாத வாசகங்கள் ஆகியவற்றை காப்புறுதி செய்யப்பட்டவர் பேணி வரவேண்டியதுடன் அவை ஏற்புடையதாகும் காலமெல்லாம் அதனை நிறைவேற்றவும் வேண்டும். மேலும் மேற்படி பிரேரணைப்பத்திரங்களுக்கான பிரகடனங்கள் மற்றும் விடைகளின் உண்மைத் தன்மை இந்தக் காப்புறுதியின் கீழ் கம்பனியினால் ஏதும் நட்டஈடுகளை வழங்குவதற்கான முன்-நிபந்தனைகளாகும்.

11. வாகனமானது அதற்கு இழப்பு அல்லது சேதம் (பகுதியளவு/பூரண) ஏற்படுகின்ற சமயத்தில் அதன் சந்தைப் பெறுமதியையும் விடக் கூடிய விலைக்கு காப்புறுதி செய்யப்பட்டுள்ளமை தெரிய வந்தால், வித்தியாச தொகைக்கு காப்புறுதி செய்யப்பட்டவரே காப்புறுதியாளராகக் கொள்ளப்படுவதுடன் அதற்கிணங்க இழப்பின் சமவிகித பங்கை அவர் பொறுப்பேற்க வேண்டும். அந்த நிபந்தனையானது இழப்பு ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் காப்புறுதித் தொகையின் 10 வீதத்தினால் சந்தைப் பெறுமதி அதிகரித்தாலன்றி ஏற்புடையதாகாது. வாகனத்தின் சந்தைப் பெறுமதியானது இழப்பு ஏற்படுகின்ற சமயத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ள வாகனத்தின் அதே வகை, மாதிரி, வடிவமைப்பு, வயது, மைல் கணக்கு மற்றும் தன்மையைக் கொண்ட ஒரு பதிலீட்டு வாகனத்தின் கொள்வனவு விலையாக இருக்கும்.

12. உரிமைக்கோரிக்கைஏதேனும் ஒரு வகையில் மோசடியானதாக இருந்தாலோ அல்லது இந்தக் காப்புறுதிப்பத்திரத்தின் கீழ் ஏதும் அனுகூலங்களைப் பெற்றுக் கொள்வதற்காக காப்புறுதி செய்யப்பட்ட வர் அல்லது அவரது சார்பில் செயற்படுகின்ற எவரேனும் ஒருவர் மோசடியான வழிமுறைகளை, சாதனங்களை அல்லது ஆவணங்களை பயன் படுத்தியிருந்தாலோ அல்லது ஏதும் இழப்பு அல்லது சேதம் காப்புறுதி செய்யப்பட்ட வர் வேண்டுமென்று மேற்கொண்ட ஒரு செயலினால் அல்லது காப்புறுதிசெய்யப்பட்டவரின் உந்துதலினால் ஏற்பட்டிருந்தாலோ இந்தக் காப்புறுதிப்பத்திரத்தின் கீழுள்ள அனைத்து அனுகூலங்களும் இழக்கப்பட் டுவிடும்.

இத்தாள் விளங்கிக்கொள்ளப்படுவது என்னவென்றால், பின்வரும் வாசகங்கள் இந்தக் காப்புறுதிப்பத்திரத்தின் அட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டிருந்தால் இதில் உள்ளடக்கப்படும் என்பதாகும். காப்புறுதிப்பத்திரத்தின் அனைத்து நியதிகளும் நிபந்தனைகளும் மற்றும் விதிவிலக்குகளும் அவை வெளிப்படையாக வித்தியாசப்பட்டிருந்தாலன்றி ஏற்புடையதாகும்

### வாசக இலக்கம் 01 - மூன்றாந் தரப்பு மாத்திரம் (THIRD PARTY ONLY)

இந்தக் காப்புறுதிப்பத்திரத்தின் 1 ஆம் பிரிவு 3ஆம் பந்தி (மற்றும் அதன் விதிவிலக்குகள்) இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக இத்தால் இணக்கப்பாட்டுடன் புரிந்து கொள்ளப்படுகின்றது.

காப்புறுதிப்பத்திரத்தில் 5ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அச்சிடப்பட்ட சொற்பிரயோகங்களும் இரத்துச் செய்யப்பட்டு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள புதிய நிபந்தனைகள் பிரதியீடு செய்யப்பட்டுள்ளதாக இத்தால் இணக்கப்பாட்டுடன் புரிந்து கொள்ளப்படுகிறது.

"5 மோட்டார் வாகனம் செயல்திறண்மிக்க நிலையில் இருப்பதற்குத் தேவையான அனைத்து நியாயமான நடவடிக்கைகளையும் காப்புறுதி செய்யப்பட்டவர் எடுக்க வேண்டியதுடன், மோட்டார் வாகனத்தை அல்லது அதன் ஏதும் பாகத்தை அல்லது காப்புறுதி செய்யப்பட்டவரின் எவரேனும் சாரதியை அல்லது ஊழியரை பரிசோதிப்பதற்காக கம்பனிக்கு உரிமை இருத்தல் வேண்டும்"

### வாசக இலக்கம் 02 - மூன்றாந் தரப்பு தீ மற்றும் திருட்டு (THIRD PARTY FIRE AND THEFT)

இந்தக் காப்புறுதிப்பத்திரத்தின் முதலாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள எதற்கும் முரணாக இருப்பினும் அது பற்றிக் கவனியாது இத்தால் இணக்கத்துடன் புரிந்து கொள்ளப்படுவது என்னவென்றால் தீ, வெளிவாரியான தீப்பற்றல், சுய தீப்பற்றல் அல்லது மின்னல் அல்லது வழிப்பறிக் கொள்ளை கண்ணம் வைத்தல் காரணமாக ஏற்படுகின்ற இழப்பு அல்லது சேதத்தைத் தவிர வேறு எது பற்றியும் கம்பனிக்கு பொறுப்பு கிடையாது என்பதாகும். மேலும் காப்புறுதிப்பத்திரத்தின் 3 ஆம் பிரிவு இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக இத்தால் இணக்கத்துடன் தெரிவிக்கப்படுகிறது.

### வாசக இலக்கம் 03 - வாடகைக் கொள்வனவு / குத்தகை (HIRE PURCHASE / LEASE)

காப்புறுதி செய்யப்பட்டவர் ஒரு மேலதிக கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளதனால் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனமானது (இதன் பின்னர் "உரிமையாளர்கள் - **owners**" என்றழைக்கப்படும்) இதன் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள வாகனத்தின் உரிமையாளர்களாக இருப்பதுடன் மேற்படி வாகனமானது உரிமையாளர்களான ஒரு தரப்புக்கும் காப்புறுதி செய்யப்பட்டவரான மறு தரப்புக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்டுள்ள வாகன கொள்வனவு / குத்தகை ஒப்பந்தத்தின் கருப்பொருளாக இருக்கும் என்பதாக இத்தால் இணக்கத்துடன் பிரகடனப்படுத்தப்படுவதுடன், இந்தப் பிரிவு இல்லாவிட்டால் அந்த உரிமையாளர்கள் இந்த சட்டத்தின் கீழ் அந்த வாகனத்துக்கு ஏற்படுகின்ற (திருத்துவதன் மூலம், மீளமைப்பதன் மூலம், மீளநிறுவுவதன் மூலம் ஈடு செய்யப்படாத இழப்பு அல்லது சேதம்) இழப்பு அல்லது சேதம் தொடர்பாக இக் காப்புறுதியின் கீழ் காப்புறுதி செய்யப்பட்டவருக்கு இந்த புறக்குறிப்புக்காக செலுத்த வேண்டியேற்படுகின்ற ஏதும் பணத்தொகைகளுக்கு உரித்துப் பெறுவார்கள் என்பதுடன் அந்த பணத்தொகைகள் அவர்கள் வாகனத்தின் உரிமையாளர்களாக இருக்கும் காலமெல்லாம் அவர்களுக்கு செலுத்தப்படுவதுடன் அது அவர்களுக்குக் கிடைப்பதானது மேற்படி இழப்பு அல்லது சேதம் தொடர்பாக கம்பனிக்கு வழங்கப்படுகின்ற முழுமையானதும் இறுதியானதுமான விடுவிப்பு சான்றாக இருக்கும் எனவும் இத்தால் மேலும் இணக்கத்துடன் பிரகடனப்படுத்தப்படுகிறது.

இந்த வாசகத்தின் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டு இணங்கியுள்ள முறையைத் தவிர இங்கு அடங்கியுள்ள எதன் மூலமும் இந்தக் காப்புறுதிப்பத்திரம் அல்லது அதன் ஓர் நிபந்தனை அல்லது நியதியின் கீழ் அல்லது அதனுடன் தொடர்புடைய காப்புறுதி செய்யப்பட்டவரின் உரிமையை அல்லது பொறுப்பை மாற்றவோ அல்லது அதன் மீது செல்வாக்கு செலுத்தவோ கூடாது.

### வாசக இலக்கம் 04 - சுயவிருப்பு மேலதிகம் - எல்லா உரிமைக்கோரிக்கைகளுக்கும் (VOLUNTARY EXCESS)

இந்தக் காப்புறுதிப்பத்திரத்தின் 1, 2 ஆம் பிரிவுகளில் எவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தாலும், ஒவ்வொரு நிகழ்வு தொடர்பாகவும் காப்புறுதி செய்யப்பட்டவர் அட்டவணையில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள அந்த தொகையை (செலவு செய்யப்படக் கூடிய அதைவிடக் குறைந்த ஒரு தொகையை) அதன் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள செலவுகள் (ஆகு செலவு மற்றும் செலவுகள் தொடர்பில் ஏதும் கொடுப்பனவுக்கள் இருப்பின் அதுவும் அடங்கலாக) மற்றும் இந்தக் காப்புறுதிப்பத்திரத்தின் 4 ஆம் பிரிவின் நிபந்தனையின் கீழ் தனது தற்றுணிபை செயல்படுத்தும் போது கம்பனியால் மேற்கொள்ளப்பட்டுள்ள ஏதும் செலவுகள் இருப்பின் அதுவும் கம்பனியால் தொகைக்காக பொறுப்புக்கூற வேண்டும்.

இதன்கீழ் காப்புறுதி செய்யப்பட்டவர் பொறுப்புக்கூற வேண்டிய தொகையும் கம்பனியால் மேற்கொள்ளப்பட்ட செலவுகளில் உள்ளடக்கப்பட்டிருந்தால் அந்த தொகை உடனடியாக காப்புறுதி செய்யப்பட்டவரால் கம்பனிக்கு மீள செலுத்தப்பட வேண்டும்.

இந்தப் பிரிவின் நோக்கத்துக்காக "நிகழ்வு" என்பது இந்தக் காப்புறுதிப்பத்திரத்தின் கீழ் நட்டஈடு வழங்கப்படுவதுடன் தொடர்புடைய அல்லது அது சம்பந்தமாக ஏதும் ஒரு மோட்டார் வாகனத்துடன் தொடர்புடைய ஒரு காரணத்தின் விளைவினால் தோன்றுகின்ற ஒரு நிகழ்வு அல்லது நிகழ்வுகளின் தொடரைக் குறிக்கும்.

### வாசக இலக்கம் 05 - தனிநபர் விபத்து அனுகூலம் (PERSONAL ACCIDENT BENEFIT)

காப்புறுதி செய்யப்பட்டவர் ஒரு மேலதிக கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளதை கருத்தில் கொண்டு, அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள எவரேனும் ஒரு ஆள் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஏதும் ஒரு வாகனத்தில் ஏறும் போது அல்லது அதிலிருந்து இறங்கும் போது அல்லது அதில் பயணம் செய்கின்ற போது இதன் பின்னர் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஏற்படுகின்ற உடல் காயத்துக்காக மற்றும் மூர்க்கத்தனமான, எதிர்பாராத, வெளிவாரியான மற்றும் கற்புலனாகின்ற ஒரு காரணத்தால் காயம் ஏற்பட்டு அதே காரணத்தின் ஒரே விளைவினால் அந்த காயம் ஏற்பட்ட திகதியிலிருந்து மூன்று (03) பஞ்சாங்க மாதங்களுக்குள் பின்வரும் விளைவுகளுக்கு காப்புறுதி செய்யப்பட்டவர் முகம் கொடுத்தால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அளவில் நட்டஈட்டை வழங்குவதற்கு கம்பனி பொறுப்பேற்பதாக இத்தால் இணக்கப்பாட்டுடன் புரிந்து கொள்ளப்படுகிறது.

### நட்டஈடு பற்றிய அட்டவணை (SCHEDULE OF COMPENSATION)

(காப்புறுதிப்பத்திரத்தின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காப்புறுதித் தொகைக்கு அமைவானது)

| | | |
|---|---|---|
| (1) | மரணம் | 100% |
| (2) | இரு கண்களினதும் பார்வை பூரணமாகவும் மீளப் பெற்றுக்கொள்ள முடியாத வகையிலும் இழத்தல் அல்லது மணிக்கட்டிலிருந்து அல்லது கரண்டைக் காலில் இருந்து அல்லது அற்கு மேலால் இரண்டு கைகளும் அல்லது இரண்டு கால்களும் அல்லது ஒரு கையும் ஒரு காலும பூரணமாகவும் வேறாக்கப்படுவதன் மூலம் இழக்கப்படுதல | 100% |
| (3) | மணிக்கட்டில் இருந்து அல்லது கரண்டைக்காலில் இருந்து அல்லது அதற்கு மேலால் ஒரு கை அல்லது ஒரு கால் வேறாக்கப்படுவதன் மூலம் பூரணமாக இழக்கப்படுதல் அல்லது ஒரு கண்ணின் பார்வை முழுதாகவும் பூரணமாகவும் மீளப் பெற்றுக் கொள்ள முடியாத வகையிலும் இழக்கப்படுதல். | 100% |

குறிப்பிடப்பட்ட கொடுப்பனவுகள் பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டிருக்கும்:

(அ) அவ்வாறான ஒருவருக்கு ஏதேனும் ஒரு நிகழ்வு மூலம் மேலே (1) தொடக்கம் (3) வரை ஏற்படுகின்ற நிகழ்வுகள் சம்பந்தமாக ஏதேனும் ஒரு நிகழ்வுக்கு மாத்திரமே நட்டஈடு வழங்கப்படும். கம்பனியால் செலுத்தப்படுகின்ற நட்டஈடு அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நட்டஈட்டு அளவுகளின் பிரிவுகளின் கீழ் செலுத்தப்படுகின்ற தொகையின் மொத்த அளவைத் தாண்ட மாட்டாது.

(ஆ) நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ முழுதாகவோ அல்லது பகுதியளவிலோ பின்வருவன காரணமாக ஏற்படுகின்ற மரணம் அல்லது காயங்கள் தொடர்பில் எந்த இழப்பீடும் செலுத்தப்பட மாட்டாது:

(i) தன்னைத்தானே காயப்படுத்திக் கொள்ளல், (பெருங்குற்றமாகவோ அல்லது இன்றியோ) தற்கொலை செய்து கொள்ளல், அல்லது தற்கொலை முயற்சி, உடலியல் குறைபாடு அல்லது பலவீனம் அல்லது

(ii) அந்த ஆள் மதுபோதைக்கு அல்லது போதைப் பொருளுக்கு ஆட்பட்டு இருக்கின்ற நிலையில் ஏற்படுகின்ற விபத்து

(இ) அவ்வாறான நட்டஈடு காப்புறுதி செய்யப்பட்டவரின் அங்கீகாரத்துடன் நேரடியாக காயமடைந்த ஆளுக்கு அல்லது அவரது சட்டரீதியான தனிப்பட்ட பிரதிநிதிக்கு மாத்திரம் செலுத்தப்படுவதுடன் அவர் மேற்படி நட்டஈட்டைப் பெற்றுக் கொண்டால் அந்த ஆளுக்கு ஏற்பட்ட காயத்துக்கு நட்டஈடு முழுதாக செலுத்தி முடிக்கப்பட்டுள்ளதாகக் கொள்ளப்படும்

(ஈ) அந்த காயம் ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட வாகனத்திற்குள் வாகனப் பதிவுச் சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்களின் எண்ணிக்கைக்கு அதிகமானவர்கள் இருக்கக் கூடாது என்பதுடன் இது பயணிகளுக்கு மாத்திரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள காப்பீடுகளுக்கு மாத்திரம் ஏற்புடையதாகும்

(உ) அந்த ஆள் இந்த காயம் ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் 16 வயதுக்குக் குறையாதவராகவும் 65 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்

(ஊ) காப்புறுதியின் கீழுள்ள கலகம், பணிப்புறக்கணிப்பு, மக்கள் கொந்தளிப்பு மற்றும் பயங்கரவாத நீடிப்பு விசேடமாக காப்பீடு செய்யப்பட்டிருந்தாலேயன்றி அந்த புறக்குறிப்பின் மூலம் காப்புறுதியின் நீடிப்புக்கு ஏற்புடையதாக மாட்டாது

## வாசக இலக்கம் 06 - பயணிகள் அபாயவாய்ப்பு (PASSENGER RISK)

(பயனிகள் ஏற்றிச் செல்லும் வர்த்தக வாகனங்களுக்கு மாத்திரம் ஏற்புடையது)

காப்புறுதி செய்யப்பட்டவர் ஒரு மேலதிக கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளதை கருத்தில் கொண்டு, இந்தக் காப்புறுதிப்பத்திரத்தின் பிரிவு 2(இ) வின் 1 (ii) (இ) ஆம் உப பிரிவுக்கு முரணாக உள்ளடக்கப்பட்டுள்ள எதனையும் கருத்தில் கொள்ளாது எனினும், மற்றப்படி இந்தக் காப்புறுதிப்பத்திரத்தின் நியதிகள், நிபந்தனைகள் மற்றும் விதிவிலக்குகளுக்கு உட்பட்டு, இத்தால் இணக்கத்துடன் பிரகடனப்படுத்தப்படுவது என்னவென்றால், கம்பனி காப்புறுதி செய்யப்பட்டவருக்கு அல்லது மூன்றாம் தரத்தவர் மாத்திரம் காப்புறுதிப்பத்திரத்தின் கீழ் நட்டஈடு வழங்கப்பட்டுள்ள ஒரு ஆளுக்கு அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஏதும் வாகனத்தில் கொண்டு செல்லப்படுகின்ற அல்லது அதில் ஏறுகின்ற அல்லது இறங்குகின்ற போது ஏதும் ஒரு ஆளுக்கு ஏற்படுகின்ற மரணம் அல்லது உடற்காயங்கள் தொடர்பாக அவர் சட்டப்படி பொறுப்புக் கூறவேண்டியேற்படுகின்ற கோரிக்கை விடுப்பவரின் செலவுகள் உள்ளிட்ட அனைத்து தொகைகளுக்கும் எதிராக கம்பனி நட்டஈடு வழங்கும் என்பதாகும்.

எனினும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆசனங்களின் எண்ணிக்கைக்கு அதிகமாக (நடத்துநர் / உதவியாளர் இருப்பின் அவர்களுக்கும் சாரதிக்கும் மேலதிகமாக) பயணிகளை ஏற்றிச் செல்கின்ற பொழுது ஒரு விபத்து இடம்பெற்றால், மேற்படி வாகனம் தொடர்புபடுகின்ற மேற்படி விபத்து தொடர்பாக இந்த புறக்குறிப்பின் காரணத்தால் கம்பனி செலுத்தவேண்டியேற்படுகின்ற மொத்த தொகையின் விகிதாசார தொகையினை காப்புறுதி செய்யப்பட்டவர் கம்பனிக்கு செலுத்துதல் வேண்டும்.

## வாசக இலக்கம் 07 - தொழிலாளர் நட்டஈட்டுக் காப்புறுதி (WORKMEN'S COMPENSATION INSURANCE)

காப்புறுதி செய்யப்பட்டவர் ஒரு மேலதிக கட்டுப்பணத்தை செலுத்தியிருப்பதைக் கவனத்தில் கொண்டு இங்குள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஏதும் மோட்டார் வாகனத்தின் அட்டவணையில் விசேடமாகக் குறிப்பிட்டுள்ள கொடுப்பனவு பெறுகின்ற சாரதி அல்லது உதவியாளர் அல்லது கிளீனர் மற்றும் ஓர் ஊழியர் ஆகிய இவர்களில் எவரேனும் ஒருவர் காப்புறுதி செய்யப்பட்டவருக்காக கடமையில் ஈடுபட்டு இருக்கும் போது ஏற்படுகின்ற தனிப்பட்ட காயங்கள் தொடர்பாக 1934 இன் தொழிலாளர் நட்டஈட்டுச் சட்டம் மற்றும் இந்த வாசகம் பிரகடனப்படுத்தப்பட முன்னர் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள அந்த கட்டளைச் சட்டம் தொடர்பான பின்வந்த திருத்தங்களுக்கு இணங்க நட்டஈடு வழங்க கம்பனி வாக்குறுதி அளிக்கிறது.

காப்புறுதிக் காலஎல்லை முடிவடைகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இந்தக் காப்புறுதிப்பத்திரத்தின் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள வாகனம் அல்லது வாகனங்கள் தொடர்பாக மேற்படி ஏதும் ஓர் சந்தர்ப்பத்தில் கடமையில் ஈடுபட்டுள்ள சாரதிகளின் (மற்றும் அல்லது உதவியாளர் அல்லது கிளீனர் மற்றும் அல்லது தொழிலாளர்கள்) எண்ணிக்கையை காப்புறுதி செய்யப்பட்டவர் உறுதி செய்ய வேண்டியதுடன் அதற்கு இணங்க கட்டுப்பணம் சீர்மை செய்யப்படும்.

அவ்வாறிருந்த போதிலும் எப்போதும்,

(i) யுத்தம், ஆக்கிரமிப்பு, வெளிநாட்டு எதிரிகளின் செயற்பாடு, பகைமை நடவடிக்கைகள் (யுத்தம் பிரகடனம் செய்யப்பட்டிருந்தாலும் இல்லாவிட்டாலும்) யுத்தம் போன்ற செயற்பாடுகள், சிவில் யுத்தம், இராணுவப் புரட்சி, மக்கள் கொந்தளிப்பு, கலகம் புரட்சி, சதிமுயற்சி, இராணுவ அல்லது அதிகார அபகரிப்பு தொடர்பில் நேரடியாக அல்லது மறைமுகமாகவுள்ள ஒரு காரணத்தால் அல்லது அது பங்களிப்புச் செய்த அல்லது அதிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட அல்லது ஏற்பட்ட ஒரு பொறுப்பு சம்பந்தமாக இந்த வாசகத்தின் கீழ் காப்புறுதி செய்யப்பட்டவருக்கு நட்டஈடு வழங்கப்பட மாட்டாது.

(ii) காப்புறுதி செய்யப்பட்டவர் அவரது வழமையான ஊழியர்களுக்காக இங்கு விபரிக்கப்பட்டுள்ள பொறுப்புக்கள் தொடர்பில் வேறேதும் காப்புறுதிக் கம்பனி அல்லது கம்பனிகளிடமிருந்து காப்புறுதிகளைப் பெற்றுக் கொண்டிருந்தால் அல்லது பின்னர் பெற்றுக் கொண்டிருந்தால் ஏதும் பொறுப்புக்கள் தொடர்பில் காப்புறுதி செய்யப்பட்டவருக்கு நட்டஈடு வழங்கப்பட மாட்டாது.

(iii) காப்புறுதி செய்யப்பட்டவர் விபத்துக்களைத் தடுத்துக் கொள்வதற்காக வேண்டி நியாயமான அனைத்து முன்னேற்பாடுகளையும் மேற்கொள்ள வேண்டியதுடன் அனைத்து நியதிச்சட்ட பொறுப்புக்களையும் நிறைவு செய்திருத்தல் வேண்டும்.

(iv) காப்புறுதி செய்யப்பட்டவர் அவரிடம் வேலை செய்கின்ற ஒவ்வொரு சாரதி அல்லது உதவியாளர்கள் அல்லது கிளீனர் அல்லது தொழிலாளர்களின் பெயர்கள் மற்றும் அவர்களுக்கு செலுத்தப்படுகின்ற சம்பளம், வேதனம் அல்லது வேறு கொடுப்பனவுகள் தொடர்பான அறிக்கைகளைப் பேண வேண்டியதுடன் மேற்படி ஆவணங்களை எந்தவொரு சந்தர்ப்பத்திலேனும் பரீட்சித்துப் பார்க்க கம்பனிக்கு அனுமதி வழங்கவும் வேண்டும்.

(v) இந்த வாசகம் தொடர்பில் செலுத்தப்படுகின்ற கட்டுப்பணம் இந்தக் காப்புறுதிப்பத்திரத்தின் கோரிக்கை விடுக்காமை போனஸ் வாசகத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற ஏதும் கொடுப்பனவுகள், அந்த கோரிக்கை விடுக்காமை போனசுக்காக காப்புறுதிப்பத்திரதின் கீழுள்ள ஓர் உரிமைக் கேரிக்கையாக கொள்ளப்படக் கூடாது.

(vi) காப்புறுதி செய்யப்பட்டவரின் வேண்டுகோளுக்கு இணங்க காப்புறுதிப்பத்திரம் இரத்துச் செய்யப்பட்டால் இந்தப் பிரிவுக்காக செலுத்தப்பட்டுள்ள எந்த கட்டுப்பணமும் மீள செலுத்தப்பட மாட்டாது.

(vii) இந்தப் பிரிவின் நோக்கத்துக்காக காப்புறுதி செய்யப்பட்டுள்ள வாகனத்தில் ஏறுகின்ற அல்லது இறக்குகின்ற நோக்கத்துக்காக கொண்டு செல்லப்படுகின்ற ஊழியர்களும் உதவியாளராகக் கருதப்படுவார்கள்,

(viii) மேற்குறிப்பிடப்பட்டவாறு ஒரு நட்டஈடு செலுத்தப்பட வேண்டியது காப்புறுதி செய்யப்பட்டவருக்கு எதிராகவுள்ள ஏதும் பொறுப்புக்களை பூரணமாக நிறைவேற்றப்பட்டுள்ளதாக மற்றும் செலுத்தி முடிக்கப்பட்டுள்ளதாக ஏற்றுக் கொள்வதற்கு, சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு ஊழியர் அல்லது அவரில் தங்கியிருப்பவர்கள் இணங்குகின்ற சந்தர்ப்பங்களில் மாத்திரமேயாகும். அவ்வாறானதோர் இணக்கம் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டால் கம்பனியானது பொதுச் சட்டத்தின் கீழ் காப்புறுதி செய்யப்பட்டவரது சட்டப் பொறுப்புக்கள் தொடர்பாக அவருக்கு நட்டஈடு வழங்குவதுடன், அதற்கு மேலதிகமாக கம்பனியின் எழுத்துமூல இணக்கத்துடன் மேற்கொள்ளப்பட்ட அனைத்து கட்டணங்கள், செலவுகள் தொடர்பாகவும் பொறுப்புக் கூறல் வேண்டும். (தனியார் கார்களுக்கு மாத்திரம் ஏற்புடையதாகும்)

## வாசக இலக்கம் 08 - இழுத்துச் செல்வதற்கான கட்டணம் (TOWING CHARGES)

காப்புறுதி செய்யப்பட்டவர் ஒரு மேலதிக கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளதனால், காப்புறுதிப்பத்திரத்தின் 1ஆம் பிரிவு விடய இலக்கம் 4 சம்பந்தமாக செலுத்தப்பட வேண்டிய ஆகக்கூடிய தொகையானது இந்த காப்புறுதியின் நியதி, நிபந்தனைகள் மற்றும் விதிவலக்குகளுக்கு உட்பட்டு அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை வரை அதிகரிக்கப்படுகிறது.

## வாசக இலக்கம் 09 - வளித்தடுப்பு / யன்னல் கண்ணாடி உடைதல் (BREAKAGE OF GLASS IN WINDSCREEN/WINDOWS)

காப்புறுதி செய்யப்பட்டவர் ஒரு மேலதிக கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளதைக் கவனத்தில் கொண்டு காப்புறுதி செய்யப்பட்ட வாகனத்தின் வளித்தடுப்பு அல்லது யன்னல்களின் ஏதும் கண்ணாடிகள், வாகனத்தின் சட்டத்துக்கு வேறேதும் சேதங்கள் ஏற்படாதவாறு உடைந்துவிட்டால் அவ்வாறு உடைவதற்கான காரணத்தைக் கவனிக்காது அந்த வளித்தடுப்பு அல்லது யன்னல்கள் மற்றும் கீறல் விழுந்த சட்டத்தை மீளமைப்பதற்கான கட்டணமாக காப்புறுதிப்பத்திர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை தாண்டாத ஒரு தொகையை ஏதும் ஒரு நிகழ்வுக்காக கம்பனி செலுத்தும். அது மட்டுமல்லாது அவ்வாறானதோர் கொடுப்பனவு மேற்கொள்ளப்படுவதானது, ஏதும் கோரிக்கை விடுக்காமை போனசுக்கு பங்கம் ஏற்படாதவாறு மற்றும் காப்புறுதிப்பத்திரத்தின் கீழ் செயற்படுகின்ற ஏதும் மேலதிகத்தை கவனத்தில் எடுக்காமலேயாகும்.

அவ்வாறில்லாது போனால் இந்தக் காப்புறுதிப்பத்திரத்தின் நியதிகள், விதிவிலக்குகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இது உட்படும்.

## வாசக இலக்கம் 10 - மூன்றாந் தரப்பு சொத்து சேதம் (THIRD PARTY PROPERTY DAMAGE)

காப்புறுதி செய்யப்பட்டவர் ஒரு மேலதிக கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளதனால் மறுபடி இந்தக் காப்புறுதிப்பத்திரத்தினதும் மூன்றாந் தரப்பு மோட்டார் வாகனக் காப்புறுதிப்பத்திரத்தினதும் நியதிகள், நிபந்தனைகள் மற்றும் விதிவிலக்குகளுக்கு உட்பட்டு இத்தால் இணக்கத்துடன் பிரகடனப்படுத்தப்படுவது என்னவென்றால், இதன் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஏதும் வாகனத்தைப் பயன்படுத்துவதனால் ஏற்பட்ட சொத்துக்கள் சேதங்கள் தொடர்பில் காப்புறுதி செய்யப்பட்டவர் சட்டப்படி பொறுப்புக் கூறவேண்டியேற்படுகின்ற உரிமைக்கோரிக்கை விடுப்பவரது செலவினங்கள் உள்ளிட்ட அனைத்து தொகைகளுக்கும் எதிராக கம்பனி நட்டஈடு வழங்கும் என்பதாகும்.

## வாசக இலக்கம் 11 - பயிலுநர் சாரதி / செலுத்துபவர்கள் (LEARNER DRIVER / RIDER)

காப்புறுதி செய்யப்பட்டவர் ஒரு மேலதிக கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளதனால், இதில் எதுவும் முரணாக இருப்பினும் கூட அதுபற்றிக் கவனியாது இத்தால் இணக்கத்துடன் பிரகடனப்படுத்தப்படுவது என்னவென்றால், அட்டவணையில் விளக்கக்கப்பட்டுள்ள ஆள் (ஆட்கள்) அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள வாகனத்தை மோட்டார் வாகன சட்டத்தின் பயிலுநர் சாரதி / ஓட்டுநர்கள் தொடர்பான தேவைகளை நிறைவேற்றியுள்ளதாக காப்புறுதி செய்யப்பட்டவர் உறுதி செய்துள்ள நிலையில் ஓட்டுவதற்கு / செலுத்துவதற்கு பயிலுகின்ற போது அதன் தொடர்பாக அமுலில் இருப்பதற்காக இந்தக் காப்புறுதி நீடிக்கப்படுகிறது என்பதாகும். இந்த நீடிப்பு சம்பந்தமாக, காப்புறுதி செய்யப்பட்டவர் முதலாவது ரூபா 2,500/- க்கு அல்லது இந்தக் காப்புறுதிப்பத்திரத்தின் 1, 2 ஆம் பிரிவுகளின் கீழ் (செலவுகள் ஆகுசெலவுகள் சம்பந்தமான ஏதும் கொடுப்பனவுகள் உட்பட) ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டுள்ள ஏதும் செலவுகளுக்கு மற்றும் 2 வது அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆள் (ஆட்கள்) ஓட்டுவதற்கு / செலுத்துவதற்கு பயிலுகின்ற பொழுது முகம்கொடுக்கின்ற ஒவ்வொரு நிகழ்வு தொடர்பிலும் இந்தக் காப்புறுதிப்பத்திரத்தின் உரிமைக்கோரிக்கைகளின் பிரிவு 1 கீழ் கம்பனி அதன் தற்றுணிபை மேற்கொள்கின்ற போது ஏற்படுகின்ற செலவுகள் ஆகியவற்றுக்கு காப்புறுதி செய்யப்பட்டவர் பொறுப்புக் கூறுதல் வேண்டும்.

இதன் கீழ் காப்புறுதி செய்யப்பட்டவர் பொறுப்புக் கூறவேண்டிய தொகையும் கம்பனியால் மேற்கொள்ளப்படுகின்ற செலவுகளில் உள்ளடக்கப்பட வேண்டியிருப்பின் அத்தொகையை உடனடியாக காப்புறுதி செய்யப்பட்டவர் கம்பனிக்கு திருப்பிச் செலுத்துதல் வேண்டும்.

இந்த பிரிவின் நோக்கத்திற்காக "நிகழ்வு" எனும் பதப்பிரயோகத்தின் கருத்து, இந்தக் காப்புறுதியின் கீழ் நட்டஈடு வழங்கப்படுகின்ற ஏதேனும் ஒரு வாகனத்துடன் தொடர்புடைய ஏதேனும் ஒரு காரணத்தினால் ஏற்படுகின்ற ஒரு நிகழ்வு அல்லது நிகழ்வுகளின் தொடர் என்பதாகும்.

இந்த பிரிவின் கீழ் காப்புறுதி செய்யப்பட்டவர் பொறுப்புக் கூறவேண்டியுள்ள தொகையானது ஏற்கனவே காப்புறுதிப்பத்திரத்திலுள்ள ஏதும் மேலதிகம் தொடர்பான பிரிவுக்கு மேலதிகமானதாக கருதப்படும்.

## வாசக இலக்கம் 12 - தவிர்க்கப்பட்ட விடயங்கள் (EXCLUDED ITEMS)

காப்புறுதி செய்யப்பட்டவர் ஒரு மேலதிக கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளதைக் கவனத்தில் கொண்டு விளக்குகளுக்கு, டயர்களுக்கு, மட்கார்டுகளுக்கு, பபர்களுக்கு, பபர் பிரகட்களுக்கு, பபர் ஏப்ரன்களுக்கு மற்றும் அல்லது பெயின்ட்களுக்கு ஏற்படுகின்ற இழப்புக்கள் தொடர்பாக ஒவ்வொரு உரிமைக்கோரிக்கை தொடர்பிலும் ரூபா 1000 இன் மேலதிகத்துக்க உட்பட்டு கம்பனியினால் நட்டஈடு வழங்கப்படுவதாக இத்தால் பிரகடனப்படுத்தி இணங்கப்படுகிறது.

## வாசக இலக்கம் 13 - பாதை அனுமதியுள்ள பேருந்து (OMNI BUSES WITH ROUTE PERMITS)

காப்புறுதி செய்யப்பட்டவர் ஒரு மேலதிக கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளதைக் கவனத்தில் கொண்டு இந்தக் காப்புறுதிப்பத்திரத்தின் 2 ஆம் பிரிவில் 2(இ) உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள எதனையும் கவனத்தில் கொள்ளாது, அவ்வாறிருந்த போதும், வேறு வகையில் இந்தக் காப்புறுதிப்பத்திரத்தின் நியதிகள், விதிவிலக்குகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு இங்கு அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஏதும் ஒரு வாகனத்தினுள் அல்லது அதன் மேல் ஏற்றிச் செல்லப்படுகின்ற அல்லது அதில் ஏறுகின்ற அல்லது இறங்குகின்ற ஒரு பயணிக்கு ஏற்படுகின்ற மரணம் அல்லது உடற்காயம் தொடர்பாக செலுத்துவதற்கு அவர் சட்டப்படி உட்படுகின்ற உரிமைக்கோரிக்கைகள் கட்டணம் மற்றும் செலவுகள் அடங்கலாக அனைத்து பணத் தொகைகள் சம்பந்தமாகவும் கம்பனியினால் காப்புறுதி செய்யப்பட்டவருக்கு இந்தக் காப்புறுதிப்பத்திரத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் நட்டஈடு வழங்கப்பட்ட வேறெவரேனும் ஆளுக்கு நட்டஈடு வழங்கப்படும்.

எனினும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆசனங்களின் எண்ணிக்கைக்கு அதிகமாக (நடத்துநர் / உதவியாளர் இருப்பின் அவர்களுக்கும் சாரதிக்கும் மேலதிகமாக) பயணிகளை ஏற்றிச் செல்கின்ற பொழுது ஒரு விபத்து இடம்பெற்றால், மேற்படி வாகனம் தொடர்புபடுகின்ற மேற்படி விபத்து தொடர்பாக இந்த புறக்குறிப்பின் காரணத்தால் கம்பனி செலுத்தவேண்டியேற்படுகின்ற மொத்த தொகையின் விகிதாசார தொகையினை காப்புறுதி செய்யப்பட்டவர் கம்பனிக்கு செலுத்துதல் வேண்டும்.

இந்த நீடிப்பு காரணமாக ஒவ்வொரு மற்றும் அனைத்து உரிமைக்கோரிக்கைகள் மீதும் 1 வது பிரிவின் கீழுள்ள ஏதும் மேலதிகத்தைக் கவனியாது ரூபா 500 க்கான கட்டாய மேலதிகத்தை காப்புறுதி செய்யப்பட்டவர் பொறுப்பேற்றல் வேண்டும்.

இங்கு மாற்றமாக குறிப்பிடப்படுகின்ற எதனையும் கவனியாது இந்தக் காப்புறுதிப்பத்திரத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள காப்பீடானது கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு உட்படுவதாக இத்தால் பிரகடனப்படுத்தி இணங்கிக் கொள்ளப்படுகிறது.

1. குறிப்பிட்ட சாரதி இதன் கீழ் காப்பீடு செய்யப்பட்டுள்ள வகுப்பு வாகனத்தை செலுத்துவதற்காக தகைமை பெற்றுள்ளார் என்பதை உறுதி செய்ய இலங்கை ஓட்டோமொபைல் சங்கத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்ட சான்றிதழை காப்புறுதி செய்யப்பட்டவர் கம்பனிக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்பதுடன், இந்த வகுப்பு வாகனத்தை செலுத்துவதில் 3 வருடங்களுக்கும் மேலான அனுபவம் உடையவர் என்பதையும் காப்புறுதி செய்யப்பட்டவர் உறுதி செய்தல் வேண்டும்.

2. அவ்வாறானதோர் சாரதியின் ஆகக் கூடிய வயது 65 வருடங்களுக்கு மேற்படாது இருக்க வேண்டும் என்பதுடன், 30 வயதுக்கு குறைந்த ஒரு சாரதியால் செலுத்தப்படுகின்ற அது போன்ற ஏதும் வாகனம் இந்தக் காப்புறுதிப்பத்திரத்தின் வேறேதும் மேலதிகங்களை கவனத்தில் கொள்ளாது ரூபா 1000 இன் மேலதிகத்துக்கு உட்படும்.

3. பாவிக்கப்பட்ட அல்லது புதுப்பிக்கப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ள ஒரு வாகனமாயின் மேற்படி வகனத்தின் தகைமை, பாதையில் ஓடக்கூடிய தகுதி மற்றும் பொதுவான நிலைமை ஆகியவற்றை உறுதி செய்வதற்காக பிரதேச முகவரிடமிருந்து அல்லது இலங்கை ஓட்டோமொபைல் சங்கத்தின் பூரண பரிசோதனை அறிக்கையை காப்புறுதி செய்யப்பட்டவர் பெற்றுக் கொள்ள வேண்டும்.

வாசக இலக்கம் 14 – வாடகை வாகனங்கள் - வாடகைக்கு பெற்றுக் கொண்டவரால் செலுத்தப்படுதல் **(HIRE VEHICLES – HIRER DRIVING)**

இந்த காப்புறுதிப்பத்திரத்தில் எதுவும் முரணாக இருப்பினும் கூட அதுபற்றிக் கவனியாது இத்தால் இணக்கத்துடன் பிரகடனப்படுத்தப்படுவது என்னவென்றால், அட்டவணையில் அல்லது அட்டவணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள வாகனம் காப்புறுதி செய்யப்பட்டவரின் பொறுப்பின் கீழ் வைத்துக் கொண்டு வாடகைக் கொள்வனவாளர்களால் அல்லது அவரது ஓர் ஊழியரால் செலுத்தப்படுவதாயின் இந்தக் காப்புறுதிப்பத்திரத்தின் கீழ் அவ்வாறு வாடகைக்கு வழங்கப்பட்டுள்ள நிலையில் செயற்பட மாட்டாது. அதாவது,

(1) அவர் (அதாவது காப்புறுதி செய்யப்பட்டவரின் வாகனத்தை வாடகை அடிப்படையில்) காப்புறுதி செய்யப்பட்டவருடன் வாடகை ஒப்பந்தத்தில் இணைந்திருப்பின் அந்த வாடகைக் கொள்வனவின் அடிப்படையில் பெற்றுக் கொள்ள முன்னர் பிரகடன ஆவணங்களை வெற்றிகரமான முறையில் பூரணப்படுத்தி கையொப்பமிட வேண்டும். (அந்த ஆவணத்தின் மாதிரி இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது)

(2) மேலும் அவர் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு காப்புறுதிக் கம்பனியை திருப்திப்படுத்தல் வேண்டும்:-

(அ) இந்த வாகனமானது அதனை செலுத்துவதற்கு அவசியமான சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள ஒருவரால் செலுத்தப்பட வேண்டும் என்பதுடன் அவரது சாரதி அனுமதிப்பத்திரத்தில் புறக்குறிப்பு இடப்பட்டிருக்கக்கூடாது.

(ஆ) மேற்படி ஆள் மீது காப்புறுதி வழங்குவதை எந்தவொரு காப்புறுதிக் கம்பனியும் நிராகரித்து இருக்கக் கூடாது. அவ்வாறே அவர் மீது அவ்வாறு வழங்கப்பட்டுள்ள காப்புறுதியை அந்த காப்புறுதிக் கம்பனி இரத்துச் செய்திருக்கவும் கூடாது. மேலும் அவருக்காக வழங்கப்பட்டுள்ள ஒரு காப்புறுதிப்பத்திரம் அவரது உரிமைக்கோரிக்கை விடுக்கும் அளவைப் பொறுத்து விசேட நிபந்தனைகள் விதிக்கப்பட்டோ அல்லது கட்டுப்பணம் அதிகரிக்கப்பட்டோ இருக்கவும் கூடாது.

மேற்படி வாகனம் அதனை வாடகைக் கொள்வனவு அடிப்படையில் பெற்றுக் கொண்டவர் பொறுப்பில் இருக்கின்ற போது காப்புறுதிக் கம்பனி பின்வரும் விடயங்கள் தொடர்பில் பொறுப்புக்களை ஏற்காது.

(i) வாடகைக் கொள்வனவு அடிப்படையில் பெற்றுக் கொண்டவரால் வாகனம் திருடப்பட்டதன் காரணமாக எழுந்துள்ள ஒரு நிலைமையின் கீழ் வாகனத்துக்கு ஏதும் சேதங்கள் ஏற்படுகின்ற போது மற்றும் மேற்படி வாகனம் வாடகைக் கொள்வனவு அடிப்படையில் பெற்றுக் கொண்டவரால் ஏதும் மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட்டிருப்பதன் காரணமாக ஏற்பட்டுள்ள சேதங்கள்.

(ii) வாடகைக் கொள்வனவு அடிப்படையில் பெற்றுக் கொண்டவரால் மேற்படி வாகனம் மக்கள் போக்குவரத்துக்காக அல்லது பொருட்கள் கொண்டு செல்லப்படுவதற்காக அல்லது பெருட்களைக் கொண்டு செல்ல வாடகையின் அடிப்படையில் அல்லது கொடுப்பனவு அடிப்படையில் பாவிக்கப்பட்டுக் கொண்டிருக்கையில் ஏற்படுகின்ற சேதங்கள்.

இது தொடர்பில் மேலும் புரிந்து கொள்ளப்பட வேண்டியது என்னவென்றால், வாகனத்தின் வாடகைக் கொள்வனவு அடிப்படையில் பெற்றுக் கொண்டவர் மேலே பிரகடனப்படுத்தப்பட்டுள்ள குறிப்பிட்ட நிபந்தனைகள், ஆவணங்கள், கூற்றுக்களை உரிய முறையில் பூரணப்படுத்தி காப்புறுதி செய்யப்பட்டவரால் பிரேரணைப்பத்திரத்துடன் காப்புறுதிக் கம்பனியிடம் ஒப்படைத்திருப்பது உரிமைக்கோரிக்கையை செலுத்துவதற்கான ஒரு முன்நிபந்தனையாக இருக்கும் என்பதாகும். இந்த வாசகத்துக்கு இணங்க அதுவே ஒப்பந்தத்தின் அடிப்படையாக அமையும்.

மேலும் பின்வரும் கட்டாய மேலதிகத்துக்கும் உட்படும்:

மோட்டார் சைக்கிள் ரூ 2000
ஏனைய வாகனங்கள்ரூ 5000

வாசக இலக்கம் 15 – சாரதி வகுப்பு **(DRIVING TUITION)**

இங்கு எதுவும் முரணாக இருப்பினும் கூட அதுபற்றிக் கவனியாது இத்தால் இணக்கத்துடன் பிரகடனப்படுத்தப்படுவது என்னவென்றால், அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வாகனம் காப்புறுதி செய்யப்பட்டவரால் அல்லது அவரது அனுமதி பெற்றுள்ள முகவரால் 1951 இன் 14 ஆம் இலக்க மோட்டார் வாகன சட்டத்தில் உள்ள வாகனமோட்டப் பயிலும் ஆட்களுக்கு ஏற்புடையதாகின்ற நியதிகளுக்கு இணங்க வாகனம் ஓட்டப் பயிலுவதற்காக பாவிக்கப்படத்தக்க வகையில் இத்தால் காப்புறுதிப்பத்திரம் நீடிக்கப்படுகிறது என்பதாகும்.

இந்த நீடிப்பு காரணமாக ஒவ்வொரு உரிமைக்கோரிக்கைக்காகவும் காப்புறுதிப்பத்திரத்தின் கீழுள்ள மேலதிகத்தை கவனியாது ரூபா 2500 மேலதிகத்தை காப்புறுதி செய்யப்பட்டவர் பொறுப்பேற்றல் வேண்டும்.

வாசக இலக்கம் 16 – வெள்ளம் **(FLOOD)**

வெள்ளப்பெருக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அல்லது சேய்மையாக காரணமாயமைந்த அல்லது பங்களிப்புச் செய்துள்ள அல்லது ஆரம்பமான அல்லது விபத்துச் சேதம் அல்லது இழப்பு இந்தக் காப்புறுதிப்பத்திரத்தின் கீழ் காப்பீடு செய்யப்பட்டுள்ளதாக இத்தால் பிரகடனப்படுத்தப்பட்டு இணங்கிக் கொள்ளப்படுகிறது.

வாசக இலக்கம் 17 – சுங்கத்தீர்வையற்ற வாகனங்கள் **(DUTY FREE VEHICLES)**

இந்தக் காப்புறுதிப்பத்திரத்தின் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள காப்புறுதி செய்யப்பட்டவரால் மேற்கொள்ளப்பட்டுள்ள பிரகடனத்துக்கு இணங்க பாகங்கள் மற்றும் உதிரிப் பாகங்கள் உள்ளடக்கப்படுகின்ற மதிப்பிடப்பட்ட பெறுமதியில் உள்நாட்டு சுங்க வரிகள் உள்ளடக்கப்படவில்லை இத்தால் இணங்கிக் கொள்ளப்படுகிறது.

மேற்படி விடயத்தை கருத்தில் கொண்டு பாகங்களைத் திருத்துவதற்குத் தேவையானவாறு இந்தக் காப்புறுதிப்பத்திரத்தின் 1வது பிரிவின் கீழ் உரிமைக்கோரிக்கை விடுக்கப்பட்டால் இந்தப் பிரிவு தொடர்பாக கம்பனியின் பொறுப்பானது அந்தப் பிரிவுகளுக்கான சுங்க வரிகளுக்கு உட்பட மாட்டாது என இத்தால் பிரகடனப்படுத்தி இணக்கம் தெரிவிக்கப்படுகிறது.

வாசக இலக்கம் 18 – கலகம், பணிப்புறக்கணிப்பு, மக்கள் கொந்தளிப்பு

**(STRIKE, RIOT AND CIVIL COMMOTION)**

காப்புறுதி செய்யப்பட்டவர் ஒரு மேலதிக கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளதைக் கவனத்தில் கொண்டு இந்தக் காப்புறுதிப்பத்திரத்தின் 4வது பொதுவான விதிவிலக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள கலகம், பணிப்புறக்கணிப்பு, மக்கள் கொந்தளிப்பு ஆகியவற்றுக்காக நீடிக்கப்படுகிறது:

(1) அந்த பணிப்புறக்கணிப்பு, கலகம் மற்றும் மக்கள் கொந்தளிப்பு ஆகிய சொற்கள் (பணிப்புறக்கணிப்பு அல்லது கதவடைப்பு ஆகிய ஏதேனும் சம்பந்தப்பட்டாலும் கூட) மக்கள் அமைதியை சீர்குலைப்பதற்கு ஏனையவர்களுடன் கலந்து கொள்கின்ற எவரேனும் ஓர் ஆளின் ஒரு செயல்.

(2) அவ்வாறு அமைதி குலைவதை தடுப்பதற்கு அல்லது கட்டுப்படுத்துவதற்கு முயற்சிக்கையில் சட்டப்படி தாபிக்கப்பட்டுள்ள ஓர் அதிகாரியின் செயல் அல்லது,

(3) பணிப்புறக்கணிப்புக்கு ஒத்துழைப்பு வழங்குதல் அல்லது கதவடைப்புக்கு எதிர் நடவடிக்கையாக மேற்கொள்ளப்படுகின்ற பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ள ஒருவரது அல்லது கதவடைப்பில் ஈடுபட்டுள்ள ஒருவரது வேண்டுமென்ற செயல் அல்லது

(4) அவ்வாறான ஏதும் செயலைத் தடுப்பதற்கு அல்லது கட்டுப்படுத்துவதற்கு முயற்சிக்கையில் அல்லது அவ்வாறான ஏதும் ஒரு செயலின் பிரதிபலனை மட்டுப்படுத்துவதற்காக சட்டப்படி தாபிக்கப்பட்டுள்ள ஓர் அதிகாரியின் செயல்,

ஆகியவற்றினால் நேரடியாக ஏற்படுகின்ற ஏதும் விபத்துக்கு, இழப்புக்கு, சேதத்துக்கு அல்லது பொறுப்புக்கு ஏற்புடையதாகாது.

அவ்வாறிருந்த போதிலும் இந்த வாசகம் காரணமாக மேற்கொள்ளப்பட்ட நட்டஈடு (சட்ட நியதிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாவதைத் தவிர)

(அ) யுத்தம், ஆக்கிரமிப்பு, வெளிநாட்டு எதிரிகளின் செயற்பாடு, பகைமை செயற்பாடுகள், (யுத்தம் பிரகடனம் செய்யப்பட்டிருப்பினும் இல்லாவிட்டாலும்) யுத்தம் போன்ற செயற்பாடுகள், சிவில் யுத்தம்

(ஆ) இராணுவக் கிளர்ச்சி, பொதுமக்கள் எழுச்சிக்கு போதுமான அல்லது அதை ஒத்த ஒன்றாக மாறிய மக்கள் கொந்தளிப்பு, இராணுவ எதிர் கிளர்ச்சி, புரட்சி, கலகம், இராணுவ அல்லது பறிக்கப்பட்ட அதிகாரம், யுத்த சட்டம் அல்லது சுற்றி வளைப்பு நிலைமையை பிரகடனம் செய்ய வேண்டியுள்ள அல்லது பராமரிக்க வேண்டுமென்று தீர்மபனிப்பதற்கு ஏதுவாமைகின்ற சம்பவங்கள் அல்லது காரணங்கள்,

(இ) ஏதும் பயங்கரவாத செயல் என்பதன் பொருள், அதிகாரத்தை அல்லது வன்முறையைப் பாவிப்பது அடங்கலாக, எனினும் அதற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிராத ஒரு செயல் அல்லது அரசியல், சமய, கருத்தியல் அல்லது ஏதும் ஓர் அரசுமீது செல்வாக்கு செலுத்தும் நோக்கம் உள்ளிட்ட அல்லது பொது மக்களை அல்லது பொது மக்களில் ஒரு பகுதியினரை பயமுறுத்தும் நோக்கம் உள்ளிட்ட இன நோக்கம் அல்லது காரணங்களுடன் தனியாக செயற்படுகின்ற அல்லது ஓர் இயத்துக்காக அல்லது அரசாங்கத்துக்காக செயற்படுகின்ற ஒரு ஆள் அல்லது ஒரு கூட்டத்தின் பயமுறுத்தல் செயற்பாடாகும்.

மேலும் அரசின் பாதுகாப்புப் படைக்கும் மேற்குறிப்பிட்ட ஏதும் ஒரு குழுவினருக்கும் இடையில் ஏதும் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தல், தடுத்தல், மட்டுப்படுத்தல் என்பவற்றுக்காக தரையில், கடலில் அல்லது வானில் ஏற்படுகின்ற ஒரு மோதலின் நேரடி அல்லது மறைமுக விளைவினால் ஏற்படுகின்ற ஓர் இழப்பு, சேதம், ஏதேனும் ஒரு வகையான செலவினங்கள், அல்லது ஆகு செலவு மேற்குறிப்பிட்ப்பட்ட பயங்கரவாதம் எனும் வரைவிலக்கணத்தில் உள்ளடக்கப்படும்.

இந்தக் காப்புறுதிப்பத்திரத்தின் கீழ் ஏதும் உரிமைக்கோரிக்கை முன்வைக்கப்பட்டால் அதற்கு ஏற்புடைய இழப்பு, சேதம் அல்லது பொறுப்பு மேற்படி ஏதும் நிகழ்வுகளில் இருந்து சுயாதீனமாக எழுந்துள்ள மற்றும் அவற்றுடன் எந்த வகையிலும் தொடர்பு பட்டிருக்கவில்லை என்பதை, அவற்றின் காரணமாக ஏற்படவில்லை என்பதை, அவற்றின் பங்களிப்பினால் ஏற்படவில்லை என்பதை அல்லது அவற்றுடன் தொடர்பு படுத்த முடியாது என்பதை காப்புறுதி செய்யப்பட்டவர் நிரூபிக்க வேண்டும் என்பதுடன் அவ்வாறு நிரூபிக்கத் தவறினால் அவ்வாறான உரிமைக்கோரிக்கை தொடர்பில் எந்த கொடுப்பனவையும் மேற்கொள்வது கம்பனியின் பொறுப்பாக மாட்டாது.

இந்தக் காப்புறுதி முடிவடைவது பற்றிய ஓர் அறிவித்தலை இறுதியாக அறிந்திருந்த காப்புறுதி செய்யப்பட்டவரது முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி எந்த சந்தர்ப்பத்திலேனும் காப்புறுதிக் கம்பனியால் காப்புறுதியை முடிவுறுத்த முடியும் என்பதையும் அவ்வாறு செய்யப்படுகின்ற போது இரத்துச் செய்யப்பட்ட திகதியிலிருந்து காலாவதியாகதிருந்த காலத்துக்காக கட்டுப்பணத்திலிருந்து மதிப்பிடப்பட்ட ஒரு தொகையை செலுத்துவது கம்பனியின் பொறுப்பு அல்ல என்பதற்கும் காப்புறுதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எதனையும் கருத்தில் எடுக்காது மேலும் பிரகடனம் செய்து இணங்கிக் கொள்ளப்படுகிறது.

இந்த நீடிப்பு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விதிவிலக்குகளுக்கு உட்படும் என்பதற்கும் மேலும் பிரகடனப்படுத்தி இணக்ககம் தெரிவிக்கப்படுகிறது:

அ. ரேடியோக்கதிரியக்க மாசு, இரசாயன, உயிரியல், உயிரியல் இரசாயன மற்றும் இலெக்ட்ரோ மெக்னடிக் ஆயுதங்கள் பற்றிய விதிவிலக்கு
**(INSTITUTE RADIOACTIVE CONTAMINATION, CHEMICAL, BIOLOGICAL, BIOCHEMICAL AND ELECTROMAGNETIC WEAPONS EXCLUSION CLAUSE)**

இந்த வாசகமானது, எல்லாவற்றையும் விட பிரதானமானதாக இருப்பதுடன் இவற்றுக்கு மாற்றமாக இந்தக் காப்புறுதியில் எது குறிப்பிடப்பட்டிருந்தாலும் அவற்றை இது இரத்துச் செய்து மேலோங்கி நிற்கும்.

1. கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் ஒன்றுடன் அல்லது நிகழ்வுடன் தொடர்புற்று அல்லது அதன் விளைவாக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஏற்பட்ட இழப்பு, சேதம், செலவுகள் ஆகியவற்றை இந்த வாசகம் எக்காரணம் கொண்டும் காப்பீடு செய்யாது:

1.1 ஏதும் அணு எரிபொருளில் இருந்து அல்லது ஏதும் அணுக் கழிவிலிருந்து அல்லது அணு எரிபொருள் தகனத்திலிருந்து ஏற்படுகின்ற ரேடியோக் கதிரியக்கத்தின் மூலமான அயனாக்கல் கதிரியக்கங்கள்.

1.2 ஏதும் அணுப் பொருத்துகைகள், பிரதிச்செயற்பாட்டு கருவிகள், அல்லது ஏனைய அணு கூட்டுக்கள் அல்லது அவற்றின் அணு சேர்க்கைகள் ஆகியவற்றின் மாசுப் பொருட்கள் அல்லது ரேடியோக் கதிரியக்கங்கள், நச்சுப் பொருட்கள், வெடிப்பொருட்கள் அல்லது ஏனைய ஆபத்தான பொருட்கள்.

1.3 அணு அல்லது அணுச்சேர்க்கை மற்றும் அணுப்பிளவு அல்லது அது போன்ற பிரதிச் செயற்பாடுகள் அல்லது ரேடியோக்கதிரியக்க சக்திகள் அல்லது பொருட்கள் ஆகியவற்றை பயன்படுத்துகின்ற ஏதும் ஆயுதங்கள் அல்லது கருவிகள்.

1.4 ரேடியோக்கதிரியக்கம், விஷம், வெடிப்பொருள் அல்லது ஏதேனும் ரேடியோக்கதிரியக்க பொருட்களின் ஆபத்தான அல்லது மாசுப் பொருட்கள். இந்த துணைப்பிரிவின் விதிவிலக்குகள் அணு எரிபொருள் அல்லாத ரேடியோக்கதிரியக்க *isotops*, தயாரிக்கப்படுதல், கொண்டு செல்லப்படுதல், களஞ்சியப்படுத்தப்படுதல், வர்த்தக, விவசாய, மருத்துவ, விஞ்ஞான அல்லது அது போன்ற சமாதான நோக்கங்களுக்க பாவிக்கப்படுதல் ஆகியவற்றுக்கு ஏற்புடையதாகாது.

1.5 ஏதும் இரசாயன, உயிரியல், உயிரியல் இரசாயன அல்லது இலெக்ட்ரோமெக்னடிக் ஆயுதங்கள்.

ஆ. சைபர் தாக்குதல் விதிவிலக்கு பற்றிய வாசகம் **(INSTITUTE CYBER ATTACK EXCLUSION CLAUSE)**

1.1 கீழே வாசக இலக்கம் 1.2 க்கு மாத்திரம் உட்படுகிறது. ஏதும் ஒரு கணனி, கணனி முறைமை, கணனி மென்பொருள் நிகழ்ச்சித்திட்டம், வன்மமான கணனி வைரஸ், அல்லது ஏதும் இலத்திரனியல் முறைமை ஆகியவற்றுக்கு தீங்கு விளைவிக்கும் ஒரு சாதனம் என்ற வகையில் பாவிக்கப்பட்ட அல்லது செயற்படுத்தப்பட்டதன் காரணமாக, அல்லது அது பங்களிப்பு செய்ததனால் ஏற்பட்ட நேரடி அல்லது மறைமுக இழப்பு, சேதம், பொறுப்பு ஆகியவற்றை இந்த காப்புறுதி எந்த வகையிலும் காப்பீடு செய்யாது.

1.2 யுத்தம், சிவில் யுத்தம், புரட்சி, கிளர்ச்சி, கலகம் அல்லது அதிலிருந்து ஏற்படுகின்ற சிவில் சண்டை, அல்லது யுத்தத்தில் ஈடுபட்டுள்ள சக்திகளின் பகைமை நடவடிக்கைகள், அல்லது அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படுகின்ற பகைமை நடவடிக்கைகள், அல்லது பயங்கரவாதம் அல்லது அரசியல் நோக்கத்துடன் செயற்படுகின்ற ஒரு ஆள் ஆகிய அபாயவாய்ப்புக்களைக் காப்பீடு செய்கின்ற காப்புறுதிப்பத்திரங்கள் மீது இந்த ஷரத்து புறக்குறிப்பு இடப்பட்டால், வாசகம் இலக்கம் 1.1 ஏதும் கணனி, கணனி முறைமை அல்லது கணனி மென்பொருள் திட்டத்தை அல்லது வேறேதும் இலத்திரனியல் முறைமையை நடைமுறைப்படுத்தும் போது அல்லது வழிகாட்டல் முறைமை அல்லது ஏதேனும் ஏவுகணை அல்லது ஆயுதத்தின் வெடிவைக்கும் பொறிமுறை ஆகியவற்றினால் ஏற்பட்ட (வேறுவகையில் காப்பீடு செய்யப்பட்டுள்ள) இழப்புக்களுக்கு விதிவிலக்கு அளிக்காது.

இந்த நீடிப்பானது பணிப்புறக்கணிப்பு, கலகம், மக்கள் கொந்தளிப்பு மற்றும் பயங்கரவாதத்துக்கான அரசாங்கத்தின் நிதியம் சார்பில் அல்லது அதற்காக வழங்கப்படுவதுடன், இந்த விசேட நீடிப்பின் கீழ் எந்த வகையான பொறுப்புக்களும் அந்த நிதியத்தினால் மாத்திரமே கையாளப்படும். ஏதும் இழப்பு அல்லது சேதம் இந்த புறக்குறிப்பு மூலம் காப்பீடு செய்யப்படவில்லை எனக்கூறி ஏதும் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டால் அந்த இழப்பு அல்லது சேதம் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பதை நிரூபிக்கும் பொறுப்பு காப்புறுதி செய்யப்பட்டவரையே சாரும்.

அவ்வாறில்லாவிட்டால் காப்புறுதிப்பத்திரத்தின் நியதிகள், நிபந்தனைகள், விதிவிலக்குகள் மற்றும் தவிர்க்கப்பட்டவைகளுக்கு உட்படும்.

வாசக இலக்கம் 19 – பயங்கரவாதம் **(TERRORISM)**

காப்புறுதிப் பொறுப்பேற்பப்பட்டுள்ள காப்புறுதியின் பணிப்புறக்கணிப்பு, கலகம் மற்றும் மக்கள் கொந்தளிப்பு புறக்குறிப்பில் அடங்கியுள்ள எதுவும் முரணாக இருப்பினும்கூட, காப்புறுதி செய்யப்பட்டவர் ஒரு மேலதிக கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளதனால் இத்தால் இணக்கத்துடன் பிரகடனப்படுத்தப்படுவது என்னவென்றால், இதில் வழங்கப்பட்டுள்ள காப்பீடு, ஏதும் பயங்கரவாத செயற்பாடு காரணமாக நேரடியாக ஏற்பட்ட அல்லது அதனுடன் தொடர்புடைய ஏதும் பின்விளைவு இழப்பு தவிர்ந்த இழப்பு அல்லது சேதத்தை உள்ளடக்குவதற்காக நீடிக்கப்படுகிறது என்பதாகும். ஏதும் பயங்கரவாத நடவடிக்கை - இதன் பெருள் ஏதும் ஓர் அரசாங்கத்தின் மீது செல்வாக்கு செலுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ள மற்றும் பொதுமக்களை அல்லது பொதுமக்களின் ஒரு பிரிவினரை பீதிக்குள்ளாக்கும் நோக்கம் உட்பட அரசியல், சமய, கொள்கை அல்லது இன நோக்கங்கள் அல்லது காரணங்களை அடிப்படையாகக் கொண்டுள்ள ஏதும் ஒரு நிறுவனத்துடன் (நிறுவனங்களுடன்) அரசுடன் (அரசுக்களுடன்) இணைந்து அல்லது அது சார்பில் அல்லது தனியாக செயற்படுகின்ற எவரேனும் ஒரு தனிநபரின் அல்லது ஆட்கள் கூட்டத்தின் அதிகாரத்தை அல்லது வன்முறையை மற்றும் / அல்லது அதன் மூலம் அச்சுறுத்துவதை உள்ளடக்கிய ஆனால் அதற்கு மட்டுப்படுத்தப்பட்டிராத ஒரு செயற்பாடு என்பதாகும்.

மேலும் அரசாங்க படைகளுக்கும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஏதும் குழுக்களுக்கும் இடையில் தரை, கடல், அல்லது வான் மார்க்கத்தில் நடைபெறுகின்ற ஒரு செயற்பாட்டை கட்டுப்படுத்துவதற்காக, தடுப்பதற்காக, அடக்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட ஏதும் நடவடிக்கையின் நேரடியாக அல்லது மறைமுகமாக ஏற்பட்ட அல்லது அதன் பெறுபேறாக ஏற்படுகின்ற ஏதும் இழப்பு, சேதம், ஆகுசெலவு அல்லது செலவுகள் என்பனவும் மேலுள்ள பயங்கரவாதம் எனும் வரைவிலக்கணத்தில் உள்ளடக்கப்படுகின்றது.

இந்த நீடிப்பானது பின்வருவனவற்றைக் காப்பீடு செய்யமாட்டாது:

(அ) எந்த வகையானதும் பின்விளைவு அல்லது நேரில் இழப்பு அல்லது சேதம்

(ஆ) வேலை நிறுத்தம் அல்லது ஏதும் செயன்முறையை அல்லது செயற்பாட்டை பூரணமாக அல்லது பகுதியளவில் தாமதப்படுத்துகின்ற அல்லது தடைப்படுத்துகின்ற அல்லது நிறுத்துகின்ற செயற்பாட்டின் விளைவாக ஏற்படுகின்ற இழப்பு அல்லது சேதம்

(இ) பறிமுதல் செய்வதில், கட்டளையிடுவதில் அல்லது சட்டரீதியாக தாபிக்கப்பட்டுள்ள எதும் ஓர் அதிகாரசபையின் அபகரிப்பில் முடிகின்ற தற்காலிக அல்லது நிரந்தர இராணுவ வியூகத்தினால் ஏற்பட்ட இழப்பு அல்லது சேதம்

இந்த நீடிப்பானது தேசியக் காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் சார்பில் வழங்கப்பட்டுள்ளதுடன் இந்த விசேட நீடிப்பின் கீழ் விடுக்கப்படுகின்ற எந்த வகையான நட்டஈடுகளும் அந்த நிதியத்தின் மூலம் மாத்திரமே பொறுப்பேற்கப்படும் என இத்தால் இணக்கத்துடன் பிரகடனப்படுத்தப்படுகிறது. ஏதும் இழப்பு, சேதம் இந்தப் புறக்குறிப்பு மூலம் காப்பீடு செய்யப்படவில்லை என்பதற்காக ஏதும் வழக்குகள், சட்டநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டால் அந்த இழப்பு அல்லது சேதம் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பதை நிரூபிக்கும் பொறுப்பு காப்புறுதி செய்யப்பட்டவருடையதாகும்.

காப்புறுதி செய்யப்பட்டவரின் வேண்டுகோளுக்கு இணங்க காப்புறுதி இரத்துச் செய்யப்பட்டால், இந்த நீடிப்புக்காக செலுத்தப்பட்டுள்ள கட்டுப்பணம் மீளளிக்கப்பட மாட்டாது.

மற்றப்படி, காப்புறுதியின் நியதிகள், நிபந்தனைகள் மற்றும் விதிவிலக்குகளுக்கு உட்பட்டிருப்பதாக மேலும் பிரகடனப்படுத்தி இணங்கிக் கொள்ளப்படுகிறது:

அ. ரேடியோக்கதிரியக்க மாசு, இரசாயன, உயிரியல், உயிரியல் இரசாயன மற்றும் இலெக்ட்ரோ மெக்னடிக் ஆயுதங்கள் பற்றிய விதிவிலக்கு **(INSTITUTE RADIOACTIVE CONTAMINATION, CHEMICAL, BIOLOGICAL, BIOCHEMICAL AND ELECTROMAGNETIC WEAPONS EXCLUSION CLAUSE)**

இந்த வாசகமானது, எல்லவற்றையும் விட பிரதானமானதாக இருப்பதுடன் இவற்றுக்கு மாற்றமாக இந்தக் காப்புறுதியில் எது குறிப்பிடப்பட்டிருந்தாலும் அவற்றை இது இரத்துச் செய்து மேலோங்கி நிற்கும்.

1. கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் ஒன்றுடன் அல்லது நிகழ்வுடன் தொடர்புற்று அல்லது அதன் விளைவாக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஏற்பட்ட இழப்பு, சேதம், செலவுகள் ஆகியவற்றை இந்த வாசகம் எக்காரணம் கொண்டும் காப்பீடு செய்யாது:

1.1 ஏதும் அணு எரிபொருளில் இருந்து அல்லது ஏதும் அணுக் கழிவிலிருந்து அல்லது அணு எரிபொருள் தகனத்திலிருந்து ஏற்படுகின்ற ரேடியோக் கதிரியக்கத்தின் மூலமான அயனாக்கல் கதிரியக்கங்கள்.

1.2 ஏதும் அணுப் பொருத்துகைகள், பிரதிச்செயற்பாட்டு கருவிகள், அல்லது ஏனைய அணு கூட்டுக்கள் அல்லது அவற்றின் அணு சேர்க்கைகள் ஆகியவற்றின் மாசுப் பொருட்கள் அல்லது ரேடியோக் கதிரியக்கங்கள், நச்சுப் பொருட்கள், வெடிப்பொருட்கள் அல்லது ஏனைய ஆபத்தான பொருட்கள்.

1.3 அணு அல்லது அணுச்சேர்க்கை மற்றும் / அல்லது அணுப்பிளவு அல்லது அது போன்ற பிரதிச் செயற்பாடுகள் அல்லது ரேடியோக்கதிரியக்க சகதிகள் அல்லது பொருட்கள் ஆகியவற்றை பயன்படுத்துகின்ற ஏதும் ஆயுதங்கள் அல்லது கருவிகள்.

1.4 ரேடியோக்கதிரியக்கம், விஷம், வெடிப்பொருள் அல்லது ஏதேனும் ரேடியோக்கதிரியக்க பொருட்களின் ஆபத்தான அல்லது மாசுப் பொருட்கள். இந்த துணைப்பிரிவின் விதிவிலக்குகள் அணு எரிபொருள் அல்லாத ரேடியோக்கதிரியக்க *isotops*, தயாரிக்கப்படுதல், கொண்டு செல்லப்படுதல், களஞ்சியப்படுத்தப்படுதல், வர்த்தக, விவசாய, மருத்துவ, விஞ்ஞான அல்லது அது போன்ற சமாதான நோக்கங்களுக்காக பாவிக்கப்படுதல் ஆகியவற்றுக்கு ஏற்புடையதாகாது.

1.5 ஏதும் இரசாயன, உயிரியல், உயிரியல் இரசாயன அல்லது இலெக்ட்ரோமெக்னடிக் ஆயுதங்கள்.

ஆ. சைபர் தாக்குதல் விதிவிலக்கு பற்றிய வாசகம் **(INSTITUTE CYBER ATTACK EXCLUSION CLAUSE)**

1.1 கீழே வாசக இலக்கம் 1.2 க்கு மாத்திரம் உட்படுகிறது. ஏதும் ஒரு கணனி, கணனி முறைமை, கணனி மென்பொருள் நிகழ்ச்சித்திட்டம், வணமமான கணனி வைரஸ், அல்லது ஏதும் இலத்திரனியல் முறைமை ஆகியவற்றுக்கு தீங்கு விளைவிக்கும் ஒரு சாதனம் என்ற வகையில் பாவிக்கப்பட்ட அல்லது செயற்படுத்தப்பட்டதன் காரணமாக, அல்லது அது பங்களிப்பு செய்ததனால் ஏற்பட்ட நேரடி அல்லது மறைமுக இழப்பு, சேதம், பொறுப்பு ஆகியவற்றை இந்த காப்புறுதி எந்த வகையிலும் காப்பீடு செய்யாது.

1.2 யுத்தம், சிவில் யுத்தம், புரட்சி, கிளர்ச்சி, கலகம் அல்லது அதிலிருந்து ஏற்படுகின்ற சிவில் சண்டை, அல்லது யுத்தத்தில் ஈடுபட்டுள்ள சக்திகளின் பகைமை நடவடிக்கைகள், அல்லது அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படுகின்ற பகைமை நடவடிக்கைகள், அல்லது பயங்கரவாதம் அல்லது அரசியல் நோக்கத்துடன் செயற்படுகின்ற ஒரு ஆள் ஆகிய அபாயவாய்ப்புக்களைக் காப்பீடு செய்கின்ற காப்புறுதிப்பத்திரங்கள் மீது இந்த ஷரத்து புறக்குறிப்பு இடப்பட்டால், வாசகம் இலக்கம் 1.1 ஏதும் கணனி, கணனி முறைமை அல்லது கணனி மென்பொருள் திட்டத்தை அல்லது வேறேதும் இலத்திரனியல் முறைமையை நடைமுறைப்படுத்தும் போது, அல்லது வழிகாட்டல் முறைமை அல்லது ஏதேனும் ஏவுகணை அல்லது ஆயுதத்தின் வெடிவைக்கும் பொறிமுறை ஆகியவற்றினால் ஏற்பட்ட (வேறுவகையில் காப்பீடு செய்யப்பட்டுள்ள) இழப்புக்களுக்கு விதிவிலக்கு அளிக்காது.

இந்த நீடிப்பானது பணிப்புறக்கணிப்பு, கலகம், மக்கள் கொந்தளிப்பு மற்றும் பயங்கரவாதத்துக்கான அரசாங்கத்தின் நிதியம் சார்பில் அல்லது அதற்காக வழங்கப்படுவதுடன், இந்த விசேட நீடிப்பின் கீழ் எந்த வகையான பொறுப்புக்களும் அந்த நிதியத்தினால் மாத்திரமே கையாளப்படும். ஏதும் இழப்பு அல்லது சேதம் இந்த புறக்குறிப்பு மூலம் காப்பீடு செய்யப்படவில்லை எனக்கூறி ஏதும் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டால் அந்த இழப்பு அல்லது சேதம் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பதை நிரூபிக்கும் பொறுப்பு காப்புறுதி செய்யப்பட்டவரையே சாரும்.

அவ்வாறில்லாவிட்டால் காப்புறுதிப்பத்திரத்தின் நியதிகள், நிபந்தனைகள், விதிவிலக்குகள் மற்றும் தவிர்க்கப்பட்டவைகளுக்கு உட்படும்.

வாசக இலக்கம் 20 – கட்டாய மேலதிகம் **(COMPULSORY EXCESS)**

இந்தக் காப்புறுதிப்பத்திரத்தின் 1 வது பிரிவில் அடங்கியுள்ள எதுவும் முரணாக இருப்பினும் அது பற்றிக் கவனியாது இத்தால் இணக்கப்பாட்டுடன் பிரகடனப்படுத்தப்படுவது என்னவென்றால், அட்டவணையில்விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள அந்த தொகை (அல்லது செலவு செய்யப்படக்கூடிய அதைவிடவும் குறைந்த ஒரு தொகையை) அதன் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஏதும் செலவினங்கள் (செலவு மற்றும் செலவினங்கள் தொடர்பான கொடுப்பனவுகள் இருப்பின் அதுவும் அடங்கலாக) இந்தக் காப்புறுதிப்பத்திரத்தின் 4 வது நிபந்தனையின் கீழ் தனது தற்றுணிபுக்கு இணங்க செயற்படுகின்ற போது பொறுப்பேற்கக்கூடிய செலவுக்கு மற்றும் கம்பனியினால் மேற்கொள்ளப்பட்ட செலவுக்கும் காப்புறுதி செய்யப்பட்டவர் பொறுப்புக்கூற வேண்டும் என்பதாகும்.

இதன்கீழ் காப்புறுதி செய்யப்பட்டவர் பொறுப்புக்கூற வேண்டிய தொகையும் கம்பனியால் மேற்கொள்ளப்பட்ட செலவுகளில் உள்ளடக்கப்பட்டிருந்தால் அந்த தொகை உடனடியாக காப்புறுதி செய்யப்பட்டவரால் கம்பனிக்கு மீள செலுத்தப்பட வேண்டும்.

இந்த பிரிவின் நோக்கத்துக்காக "நிகழ்வு" என்பது இந்தக் காப்புறுதிப்பத்திரத்தின் கீழ் நட்டஈடு வழங்கப்படுவதுடன் தொடர்புடைய அல்லது அது சம்பந்தமாக ஏதும் ஒரு மோட்டார் வாகனத்துடன் தொடர்புடைய ஒரு காரணத்தின் விளைவினால் தோன்றுகின்ற ஒரு நிகழ்வு அல்லது நிகழ்வுகளின் தொடரைக் குறிக்கும்.

வாசக இலக்கம் 21 – நிறுவனக் கடன் **(INSTITUTIONAL LOAN)**

இந்த அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள வாகனத்தைப் பிணையாக வைத்து முற்பணம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தால் அட்டவணையில் குறிப்பிடப்பட்டு நிறுவனம், அந்த வாகனத்துக்கு ஏற்படுகின்ற (திருத்துவதன் மூலம், மீளநிறுவுவதன் மூலம், மீளமைப்பதன் மூலம் நிறைவு செய்யப்பட்டுள்ள இழப்பு அல்லது சேதம்) இழப்பு அல்லது சேதத்துக்காக இந்தக் காப்புறுதியின் கீழ் காப்புறுதி செய்யப்பட்டவருக்கு செலுத்தப்படக்கூடிய பணத்துக்கு இந்த புறக்குறிப்பு காரணமாக உரித்துப் பெற்றிருக்கும் என இத்தால் இணங்கப்பாட்டுடன் பிரகடனப்படுத்தப்படுகிறது. மேலும் மேற்படி பணம் மேற்படி நிறுவனம் மேற்படி வாகனத்தின் மீது உரிமை கொண்டாடும் வரை மேற்படி நிறுவனத்துக்கே செலுத்தப்படுவதுடன் அவர்களுக்கு பணம் கிடைத்தமையானது அந்த இழப்பு அல்லது சேதம் தொடர்பில் கம்பனியின் பொருப்புக்கள் பூரணமாக நிறைவேற்றப்பட்டுள்ளதற்கான சான்றாக இருக்கும்.

வாசக இலக்கம் 22 – பொருட்கள் பெயர்வு – ஆபத்தற்றவை **(GOODS IN TRANSIT - NON HAZARDOUS)**

காப்புறுதி செய்யப்பட்டவர் ஒரு மேலதிக கட்டுப்பணத்தை செலுத்தியிருப்பதனால் இத்தால் இணக்கத்துடன் பிரகடனப்படுத்தப்படுவது என்னவென்றால், அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஏதும் ஒரு வாகனத்தில் பொருட்கள் கொண்டு செல்லப்பட்டுக் கொண்டிருக்கையில் மேற்படி வாகனம் ஏதேனும் ஒன்றுடன் மோதியதனால் அல்லது அந்த வாகனம் குடைசாய்ந்ததன் நேரடி விளைவாக அவற்றுக்கு ஏற்படுகின்ற சேதத்துக்கு எதிராக (விசேடமாக காப்பீடு செய்யப்பட்டிருந்தாலன்றி அல்லது வெடித்தல் அல்லது பணிப்புறக்கணிப்பு, கலகம், மக்கள் கொந்தளிப்பு, மற்றும் பயங்கரவாதம் ஆகியவற்றின் நேரடியான அல்லது மறைமுகமான சேதங்கள் தவிர) காப்புறுதி செய்யப்பட்டவருக்கு நட்டஈடு வழங்கும் என்பதாகும். மேற்படி இழப்பீடு ஏதேனும் ஒரு நிகழ்வுக்காக அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கு மட்டுப்படுத்தப்பட்டிருக்கும்.

எனினும் விபத்து இடம்பெறுகின்ற சந்தர்ப்பத்தில் மேற்படி வாகனத்தில் கொண்டு செல்லப்படுகின்ற பொருட்களின் ஒன்றிணைந்த பெறுமதி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காப்பீட்டுத் தொகையையும் தாண்டும் பட்சத்தில் அந்த குறிப்பிட்ட மேலதிக தொகைக்கு காப்புறுதி செய்யப்பட்டவர் சுய காப்புறுதியாளராகக் கொள்ளப்படுவதுடன், அதற்கிணங்க இழப்பின் சமவிகித அளவு பங்குக்கு அவர் பொறுப்புக் கூறுதல் வேண்டும்.

மேலும் இணக்கத்துடன் பிரகடனம் செய்யப்படுவது என்னவென்றால், பின்வருவனவற்றுக்கு ஏற்படும் சேதங்கள் சம்பந்தமாக இந்த வாசகத்தின் கீழ் கம்பனிக்கு எந்தப் பொறுப்பும் கிடையாது என்பதாகும்:

பீங்கான் மற்றும் மட்பாண்டப் பொருட்கள்
கடிகாரங்கள் மற்றும் கைக்கடிகாரங்கள்
ஆபரணங்கள்
பெற்றோலியம்
கண்ணாடிப் பொருட்கள்
மின் உபகரணங்கள் அல்லது பாகங்கள்
தளபாடங்கள்
படங்கள், அச்சிடப்பட்ட பிரதிகள் அல்லது சித்திரங்கள்

அலங்காரங்கள்
கண்ணாடிப் பாத்திரங்களில் உள்ள பொருட்கள்
வைன் மற்றும் ஸ்பிரிட்
பைபர்
பருத்தி கழிவுகள்
கால்நடைகள்
கடதாசிக் கழிவுகள்
விஞ்ஞான உபகரணங்கள்
வெடிப் பொருட்கள்
இலத்திரனியல் பொருட்கள்
புகைப்படக் கருவிகள்

இந்த புறக்குறிப்பின் நோகத்துக்காக "நிகழ்வு" என்பதன் பொருள், அந்த புறக்குறிப்பின் கீழ் நட்டஈடு வழங்கப்படுகின்ற ஏதேனும் ஒரு வாகனத்துடன் தொடர்புடைய ஏதேனும் ஒரு காரணத்தால் தோன்றுகின்ற ஒரு நிகழ்வு என்பதாகும்.

வாசக இலக்கம் 23 – பொருட்கள் பெயர்வு – ஆபத்தானவை **(GOODS IN TRANSIT - HAZARDOUS)**

காப்புறுதி செய்யப்பட்டவர் ஒரு மேலதிக கட்டுப்பணத்தை செலுத்தியிருப்பதனால் இத்தால் இணக்கத்துடன் பிரகடனப்படுத்தப்படுவது என்னவென்றால், அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஏதும் ஒரு வாகனத்தில் பொருட்கள் கொண்டு செல்லப்பட்டுக் கொண்டிருக்கையில் மேற்படி வாகனம் ஏதேனும் ஒன்றுடன் மோதியதனால் அல்லது அந்த வாகனம் குடைசாய்ந்ததன் நேரடி விளைவாக அவற்றுக்கு ஏற்படுகின்ற சேதத்துக்கு எதிராக (விசேடமாக காப்பீடு செய்யப்பட்டிருந்தாலன்றி அல்லது வெடித்தல் அல்லது பணிப்புறக்கணிப்பு, கலகம், மக்கள் கொந்தளிப்பு, மற்றும் பயங்கரவாதம் ஆகியவற்றின் நேரடியான அல்லது மறைமுகமான சேதங்கள் தவிர) காப்புறுதி செய்யப்பட்டவருக்கு நட்டஈடு வழங்கும் என்பதாகும். மேற்படி இழப்பீடு ஏதேனும் ஒரு நிகழ்வுக்காக அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கு மட்டுப்படுத்தப்பட்டிருக்கும்.

எனினும் விபத்து இடம்பெறுகின்ற சந்தர்ப்பத்தில் மேற்படி வாகனத்தில் கொண்டு செல்லப்படுகின்ற பொருட்களின் ஒன்றிணைந்த பெறுமதி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காப்பீட்டுத் தொகையையும் தாண்டும் பட்சத்தில் அந்த குறிப்பிட்ட மேலதிக தொகைக்கு காப்புறுதி செய்யப்பட்டவர் சுய காப்புறுதியாளராகக் கொள்ளப்படுவதுடன், அதற்கிணங்க இழப்பின் சமவிகித அளவு பங்குக்கு அவர் பொறுப்புக் கூறுதல் வேண்டும்.

இந்த புறக்குறிப்பின் நோகத்துக்காக "நிகழ்வு" என்பதன் பொருள், அந்த புறக்குறிப்பின் கீழ் நட்டஈடு வழங்கப்படுகின்ற ஏதேனும் ஒரு வாகனத்துடன் தொடர்புடைய ஏதேனும் ஒரு காரணத்தால் தோன்றுகின்ற ஒரு நிகழ்வு என்பதாகும்.

இந்த புறக்குறிப்பின் கீழ் வழங்கப்பட்டுள்ள காப்பீட்டில் பெற்றோலியம், பைபர், பருத்தி கழிவுகள், கடதாசி கழிவுகள், வெடிப் பொருட்கள் ஆகியன விசேடமாக காப்பீடு செய்யப்பட்டிருந்தாலன்றி உள்ளடக்கப்பட மாட்டாது.

வாசக இலக்கம் 24 – உதிரிப் பாகங்கள் திருட்டு நீடிப்பு
**(THEFT OF PARTS EXTENSION)**
(தனியார் இருநோக்க வாகனங்களுக்கு மாத்திரம்)

காப்புறுதி செய்யப்பட்டவர் ஒரு மேலதிக கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளதனால் இத்தால் இணக்கத்துடன் பிரகடனப்படுத்தப்படுவது என்னவென்றால், ஒரே சமயத்தில் வாகனமும் திருடப்பட்டிருந்தாலன்றி கொள்ளை, கன்னம்வைத்தல் அல்லது திருட்டு மூலம் துணைப்பாகங்களுக்கு, உதிரிப்பாகங்களுக்கு மற்றும் உள்ளகப் பாகங்களுக்கு ஏற்படுகின்ற சேதங்களுக்கு நட்டஈடு வழங்குவதற்காக இந்தக் காப்புறுதி நீடிக்கப்படுகிறது என்பதாகும்.

இந்த நீடிப்பு தொடர்பாக, காப்புறுதியின் நியதிகள், நிபந்தனைகள் மற்றும் விதிவிலக்குகளுக்கு உட்பட்டு ஏதும் மேலதிகங்கள் இருப்பின் அதுபற்றிக் கவனியாது ஒவ்வொரு உரிமைக்கோரிக்கையின் போதும் முதல் 2000/- ரூபாவை காப்புறுதி செய்யப்பட்டவர் பொறுப்பேற்றல் வேண்டும்.

வாசக இலக்கம் 25 – இயற்கை அனர்த்தங்கள் **(NATURAL PERILS)**

இந்தக் காப்புறுதிப்பத்திரத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள காப்பீடானது, இதன் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்களுக்கு இங்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள உபத்திரவங்கள் காரணமாக அல்லது அதன் மூலம் அல்லது அதன் ஒரு விளைவாக இழப்பு அல்லது சேதம் ஏற்பட்டால் நட்டஈடு வழங்குவதற்காக நீடிக்கப்படுகிறது என பிரகடனப்படுத்தி இணங்கிக் கொள்ளப்படுகிறது.

அ. சுனாமி
ஆ. வற்றுப்பெருக்கலை
இ. புவிநடுக்கம்
ஈ. ஏரிமலை வெடித்தல்
உ. புயல் மற்றும் டெம்பஸ்ட்
ஊ. மண்சரிவு
எ. நிலச்சரிவு
ஏ. ஹரிகேன் சூறாவளி
ஐ. டோனாடோ சூறாவளி
ஒ. சூறாவளி

மேற்குறிப்பிடப்பட்டுள்ள உபத்திரவங்களுடன் தொடர்பு படாத ஏனைய வளிமண்டல சீர்கேடுகள் மற்றும் இயற்கை அனர்த்தங்களின் நேரடி அல்லது மறைமுக காரணங்களால் ஏற்படுகின்ற ஏதும் நட்டம் அல்லது சேதம் இந்த காப்புறுதிப்பத்திரத்தின் கீழ் காப்பீடு செய்யப்பட மாட்டாது.

வாசக இலக்கம் 26 – பயங்கரவாத புறக்குறிப்பு, மோட்டாரின் கீழ் பொருட்கள் பெயர்வு
**(TERRORISM ENDORSEMENT, GOODS IN TRANSIT UNDER MOTOR)**

காப்புறுதி செய்யப்பட்டவரால் ஒரு மேலதிக கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளதை கவனத்தில் கொண்டு இந்தக் காப்புறுதிப்பத்திரத்துடன் இணைக்கப்பட்டுள்ள கலகம், பணிப்புறக்கணிப்பு, மக்கள் கொந்தளிப்பு மற்றும் பயங்கரவாதம் பற்றிய புறக்குறிப்பானது இந்த புறக்குறிப்பு மூலம் வழங்கப்பட்டுள்ள காப்பீட்டுக்கும் ஏற்புடையதாகிறது என இத்தால் பிரகடனப்படுத்தி இணங்கிக் கொள்ளப்படுகிறது.

எவ்வாறிருப்பினும் செலுத்தப்பட முடியாத எனினும் கலகம், பணிப்புறக்கணிப்பு, மக்கள் கொந்தளிப்பு மற்றும் பயங்கரவாதம் பற்றிய புறக்குறிப்புக்காக செலுத்தப்படுகின்ற ஒவ்வொரு மற்றும் அனைத்து இழப்புக்களின் போதும் ஆகக் கூடியது ரூபா 5000 வரையறைக்குட்பட்டு பொருட்களுக்கான காப்புறுதித் தொகையின் முதல் 10 சதவீதத்துக்காக காப்புறுதி செய்யப்பட்டவர் பொறுப்புக் கூற வேண்டும் என்பதாகும்.

மேலும், ஒரு சேதத்துக்காக கம்பனியின் பொறுப்பானது விபத்து இடம்பெறுகின்ற சந்தர்ப்பத்தில் கொண்டு செல்லப்பட்ட பொருட்களின் ஆகக்கூடிய அளவு அல்லது காப்புறுதித் தொகை ஆகிய இரண்டில் குறைந்த தொகையை தாண்டக் கூடாது.

இதன் கீழ் உரிமைக்கோரிக்கை செலுத்தப்பட முடியுமான ஏதும் நிகழ்வு ஏற்பட்டால் நூறு சதவீதம் அந்த பணத்தொகைக்காக மாத்திரம் சரிசமவிகித பெறுமதிக்கு கணக்கிடப்பட்ட ஒரு மேலதிக கட்டுப்பணத்தை செலுத்துவதன் மூலம் காப்புறுதி செய்யப்பட்டவர் இந்தக் காப்புறுதிப்பத்திரத்தை மீளநிறுவிக் கொள்ளுதல் வேண்டும்.

இந்தக் காப்புறுதிப்பத்திரத்தில் முரணாக எதுவும் குறிப்பிடப்பட்டிருந்த போதும் அது பற்றிக் கவனியாது காப்புறுதிக் கம்பனியால் காப்புறுதிப்பத்திரத்துக்கு இணைக்கப்பட்டுள்ள பயங்கரவாதக் காப்பீடு இரத்துச் செய்யப்பட்டால் காப்புறுதி செய்யப்பட்டவருக்கு விகிதசம அடிப்படையில் ஒரு கொடுப்பனவு அனுமதிக்கப்படும். எனினும் காப்புறுதி செய்யப்பட்டவரின் கோரிக்கையின் பேரில் இந்தக் காப்பறுதி இரத்துச் செய்யப்பட்டால் எந்த கட்டுப்பணமும் மீள செலுத்தப்பட மாட்டாது.

இந்த நீடிப்பானது கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விதிவிலக்குகளுக்கு உட்படுவதாக மேலும் பிரகடனப்படுத்தி இணங்கிக் கொள்ளப்படுகிறது:

அவ்வாறிருப்பினும் கீழ் வரும் சந்தர்ப்பங்களில் கொடுப்பனவு வழங்கப்பட மாட்டாது:

அ. ஒரு காப்புறுதிக் காலத்தில் நான்கு பேருக்கு அதிகமானவர்களுக்கு கொடுப்பனவு வழங்கப்பட மாட்டாது. எவ்வாறிருப்பினும் உரிமைக்கோரிக்கை விடுக்கப்பட்டால் ஏற்புடைதாகின்றவாறு கட்டுப்பணத்தின் 100 சதவீதத்தை செலுத்தி காப்புறுதியை மீளநிறுவிக் கொள்ளலாம்.

ஆ. வேறேதும் ஒரு காரணம் தொடர்புபட்டிருக்காது (அவ்வாறானதோர் நிகழ்வை அடிப்படையாக வைத்து மேற்கொள்ளப்படுகின்ற வைத்திய அல்லது சத்திர வைத்திய சிகிச்சை தவிர) அவ்வாறான செயற்பாட்டின் நேரடியான பெறுபேறு மூலம் அந்த நிகழ்வு இடம் பெற்று மூன்று (03) பஞ்சாங்க மாதங்களுக்குள் மரணம் ஏற்பட்டிருந்தால்.

காப்புறுதி செய்யப்பட்டவரின் அனுமதியின் பேரில் மாத்திரம் கொடுப்பனவு மேற்கொள்ளப்படுவதுடன், அது நேரடியாக மரணித்தவரின் சட்டரீதியான தனிப்பட்ட பிரதிநிதிக்கு செலுத்தப்படும். அவர்களுக்கு மேற்படி தொகை கிடைப்பதானது கம்பனியை அதன் சகல பொறுப்புக்களில் இருந்தும் செல்லுபடியான முறையில் விடுவிக்கப்பட்டுள்ளதாகக் கொள்ளப்படுகிறது.

இந்தக் காப்புறுதிப்பத்திர்த்தில் அடங்கியுள்ள எதுவும் முரணாக இருப்பினும் அது பற்றிக் கவனியாது காப்புறுதிக் கம்பனியால் இந்தக் காப்புறுதிப்பத்திரத்தில் இணைக்கப்பட்டுள்ள பயங்கரவாதக் காப்பீடு இரத்துச் செய்யப்பட்டால் காப்புறுதி செய்யப்பட்டவருக்கு விகிதசம அடிப்படையில் மீள்கொடுப்பனவு அனுமதிக்கப்படுகிறது. எனினும் காப்புறுதி செய்யப்பட்டவரின் வேண்டுகோளுக்கு இணங்க காப்புறுதி இரத்துச் செய்யப்பட்டால், இந்த நீடிப்புக்காக செலுத்தப்பட்டுள்ள கட்டுப்பணம் மீளளிக்கப்பட மாட்டாது.

மற்றப்படி, காப்புறுதியின் நியதிகள், நிபந்தனைகள் மற்றும் விதிவிலக்குகளுக்கு உட்பட்டிருப்பதாக மேலும் பிரகடனப்படுத்தி இணங்கிக் கொள்ளப்படுகிறது:

வாசக இலக்கம் 29 – பயங்கரவாதக் காப்பீடு – பேருந்துகளிலுள்ள பயணிகளுக்கான தனிநபர் விபத்து **(TERRORISM COVER ON PERSONAL ACCIDENT TO PASSENGERS IN BUSES)**

காப்புறுதி செய்யப்பட்டவர் ஒரு மேலதிக கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளதை கவனத்தில் கொண்டு இத்தால் இணக்கத்துடன் பிரகடனம் செய்யப்படுவது என்னவென்றால் காப்புறுதி அட்டவணையில் பெயரிடப்பட்டுள்ள பேருந்தில் பயணம் செய்கின்ற ஒரு பயணிக்காக தேசியக் காப்புறுதி நம்பிக்கை நிதியத்துக்காக காப்புறுதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை செலுத்துவதற்கு கம்பனி வாக்குறுதி அளிக்கிறது என்பதாகும். ஏதும் பயங்கரவாத நடவடிக்கை என்பதன் பொருள் ஏதும் ஓர் அரசாங்கத்தின் மீது செல்வாக்கு செலுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ள பொதுமக்களை அல்லது பொதுமக்களின் ஒரு பிரிவினரை பீதிக்குள்ளாக்கும் நோக்கம் உட்பட அரசியல், சமய, கொள்கை அல்லது இன நோக்கங்கள் அல்லது காரணங்களை அடிப்படையாகக் கொண்டுள்ள ஏதும் ஒரு நிறுவனத்துடன் (நிருவனங்களுடன்) அரசுடன் (அரசுக்களுடன்) இணைந்து அல்லது அது சார்பில் அல்லது தனியாக செயற்படுகின்ற எவரேனும் ஒரு தனிநபரின் அல்லது ஆட்கள் கூட்டத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற பயமுறுத்தல் செயற்பாடாகும்.

மேலும் அரசாங்க பாதுகாப்புப் படைகளுக்கும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஏதும் குழுக்களுக்கும் இடையில் தரை, கடல், அல்லது வான் மார்க்கத்தில் நடைபெறுகின்ற ஒரு செயற்பாட்டை கட்டுப்படுத்துவதற்காக, தடுப்பதற்காக, அடக்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட ஏதும் நடவடிக்கையின் நேரடியாக அல்லது மறைமுகமாக ஏற்பட்ட அல்லது அதன் பெறுபேறாக ஏற்படுகின்ற ஏதும் இழப்பு, சேதம், ஆகுசெலவு அல்லது செலவுகள் என்பனவும் மேலுள்ள பயங்கரவாதம் எனும் வரைவிலக்கணத்தில் உள்ளடக்கப்படுகின்றது.

காப்புறுதி செய்யப்பட்டவரின் அனுமதியின் பேரில் மாத்திரம் கொடுப்பனவு மேற்கொள்ளப்படுவதுடன், அது நேரடியாக மரணித்தவரின் சட்டரீதியான தனிப்பட்ட பிரதிநிதிக்கு செலுத்தப்படும். அவர்களுக்கு மேற்படி தொகை கிடைப்பதானது கம்பனியை அதன் சகல பொறுப்புக்களில் இருந்தும் செல்லுபடியான முறையில் விடுவிக்கப்பட்டுள்ளதாகக் கொள்ளப்படுகிறது.

இந்தக் காப்புறுதிப்பத்திரத்தில் அடங்கியுள்ள எதுவும் முரணாக இருப்பினும் அது பற்றிக் கவனியாது காப்புறுதிக் கம்பனியால் இந்தக் காப்புறுதிப்பத்திரத்தில் இணைக்கப்பட்டுள்ள பயங்கரவாதக் காப்பீடு இரத்துச் செய்யப்பட்டால் காப்புறுதி செய்யப்பட்டவருக்கு விகிதசம அடிப்படையில் மீள்கொடுப்பனவு அனுமதிக்கப்படுகிறது. எனினும் காப்புறுதி செய்யப்பட்டவரின் வேண்டுகோளுக்கு இணங்க காப்புறுதி இரத்துச் செய்யப்பட்டால், இந்த நீடிப்புக்காக செலுத்தப்பட்டுள்ள கட்டுப்பணம் மீளளிக்கப்பட மாட்டாது.

மற்றப்படி, காப்புறுதியின் நியதிகள், நிபந்தனைகள் மற்றும் விதிவிலக்குகளுக்கு உட்பட்டிருப்பதாக மேலும் பிரகடனப்படுத்தி இணங்கிக் கொள்ளப்படுகிறது:

கட்டுப்பணம் செலுத்தும் செயலாணை **(PREMIUM PAYMENT WARRANTY)**

1. இங்கு எதுவும் உள்ளடக்கப்பட்டிருந்தாலும் ஆனால் இங்குள்ள ii மற்றும் iii ஆம் பிரிவுகளுக்கு உட்பட்டு இத்தால் இணக்கப்பாட்டுடன் பிரகடனம் செய்யப்படுவது என்னவென்றால், நிலுவையிலுள்ள மற்றும் இந்தக் காப்புறுதி சம்பந்தமாக செலுத்தப்பட வேண்டியுள்ள மொத்த கட்டுப்பணமும் கம்பனியுடன் இணங்கியுள்ள உரிய திகதியில் (மேற்படி திகதியானது காப்புறுதிப்பத்திர ஆரம்பத் திகதியிலிருந்து 60 நாட்களைத் தாண்டாத ஒரு திகதியாக இருக்கும்) அல்லது அதற்கு முன்னர் காப்புறுதிக் கம்பனிக்கு செலுத்தப்பட வேண்டும் என்பதுடன், அவ்வாறானதோர் உரிய திகதி இல்லாத பட்சத்தில் மொத்த கட்டுப்பணமும் இந்தக் காப்புறுதிப்பத்திரம் ஆரம்பிக்கப்பட்ட திகதி, புதுப்பித்தல் சான்றிதழ் திகதி, புறக்குறிப்பு இடப்பட்ட திகதி அல்லது தற்காலிக காப்புறுதிப்பத்திரம் வழங்கப்பட்ட திகதியிலிருந்து (இதன் பின்னர் "உரிய திகதி" என்றழைக்கப்படும்) 60 நாட்கள் கழிந்து விடுவதற்கு முன்னர் செலுத்தப்பட வேண்டும் என கோரப்படுகிறது. இந்த செயலாணையின் நோக்கத்துக்காக "உரிய திகதி" யானது காப்பீட்டின் ஆரம்பத் திகதியாக ஏற்றுக் கொள்ளப்படும்.

2. மேலும் இணக்கப்பாட்டுடன் பிரகடனப்படுத்தப்படுவது என்னவென்றால் உரிய திகதிக்கு முன்னர் முழுக் கட்டுப்பணத்தையும் செலுத்துவதானது காப்புறுதிக் கம்பனியின் பொறுப்புக்கு அல்லது இந்தக் காப்புறுதிப்பத்திரம், புதுப்பித்தல் சான்றிதழ், புறக்குறிப்பு அல்லது கவர் நோட் ஆகியவற்றின் கீழ் பொறுப்பை நிறைவேற்றுவதற்கு ஒரு முன் நிபந்தனையாக இருக்கும் என்பதாகும்.

   இந்தக் காப்புறுதியின் ஆரம்பத் திகதிக்கும் கட்டுப்பணம் செலுத்தப்பட வேண்டியுள்ள உரிய திகதிக்கும் இடையில் ஏதும் உரிமைக்கோரிக்கைகள் எழுந்தால், உரிய திகதியில் அல்லது அதற்கு முன்னர் முழு கட்டுப்பணமும் செலுத்தப்படும் வரை அவ்வாறான ஏதும் உரிமைக்கோரிக்கைகளை செலுத்துவதற்கான தனது தீர்ப்பை காலம் தாழ்த்தலாம் அல்லது பிற்போடலாம்.

3. மேலும் இணக்கத்துடன் பிரகடனம் செய்யப்படுவது என்னவென்றால், உரிய திகதியில் காப்புறுதிக் கம்பனியின் வியாபாரம் முடிவுறுத்தப்படுகின்ற சமயத்தில் இதன் கீழ் செலுத்தப்பட வேண்டிய மொத்த கட்டுப்பணமும் நிலுவையில் இருந்தால், இந்தக் காப்புறுதியின் கீழுள்ள காப்பீடு மற்றும் இந்தக் காப்புறுதின் கீழுள்ள பொறுப்புக்கள் இரத்துச் செய்யப்படும் அல்லது நிறுத்தப்படும் மற்றும் உடனடியாக முடிவுறுத்தப்படும்.

4. எவ்வாறிருப்பினும், மேற்சொன்னவாறு இரத்துச் செய்வதன் மூலம் ஏதும் சட்ட பிரதிவாதங்களை மேற்கொள்வதற்காக அல்லது காலாவதியான காப்புறுதிக் காலத்துக்காக செலுத்தப்படாது இருந்த மொத்த அல்லது ஒரு பகுதி கட்டுப்பணத்தை அறவிட்டுக் கொள்வதற்காக கம்பனிக்கு உள்ள உரிமைக்கு எந்தவித பங்கமும் ஏற்பட மாட்டாது.

## வாகனத்தைப் பயன்படுத்துபவர்களுக்கான முக்கிய அறிவித்தல்
## (IMPORTANT NOTICE TO MOTORISTS)

### பொலிஸ் அறிக்கை **(POLICE REPORT)**

மோட்டார் வாகன சட்டத்தின் 161 (1) (அ) ஆம் பிரிவுக்கு இணங்க பெருந்தெருவில் ஒரு வாகனம் செலுத்தப்பட்டுக் கொண்டிருக்கையில் ஒரு விபத்துக்கு முகம் கொடுக்கின்ற ஒவ்வொரு சாரதியும் அந்த விபத்து சம்பந்தமாக அருகிலுள்ள பொலிஸ் நிலையத்துக்கு அது பற்றி அறிவிக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறார்கள். எனவே காப்புறுதிச் சான்றிதழுள்ள அனைத்து காப்புறுதிதாரர்களும் இதைப் பின்பற்றுதல் வேண்டும். ஓர் உரிமைக்கோரிக்கை சிறிய அளவினதாக இருக்கின்ற பட்சத்தில் கொன்டினென்டல் இன்சூவரன்ஸ் லங்கா லிமிட்டெட் இந்த தேவையை விட்டுவிடலாம். எவ்வாறிருப்பினும் காவல் துறைக்கு உரிமைக்கோரிக்கை பற்றிய அறிக்கைகளை சமர்ப்பிக்கும் கடப்பாடு பற்றி மோட்டார் வாக சட்டத்தின் 161 (இ) பிரிவுக்கு இணங்கி நடப்பதை உறுதி செய்வதற்காக உரிமைக்கோரிக்கையை தரப்படுத்துநருக்கு AIB இன் தொடர் இலக்கத்தை தொலைபேசி மூலம் சமர்ப்பிக்குமாறு காப்புறுதி செய்யப்பட்டவர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். இதன்படி நடக்கத் தவறினால் 2009 ஜுலை 1 ஆந் திகதி தொடக்கம் செயற்படுத்தப்பட்டுள்ள சட்டத்தின் உரிய பிரிவுகளின் கீழ் மோட்டார் வாகனத்தை செலுத்துபவர் மட்டுமன்றி காப்புறுதிக் கம்பனியும் அபராதம் செலுத்த வேண்டியேற்படும்.

### காப்புறுதியை மாற்றுதல் **(TRANSFER OF INSURANCE)**

1951 ஆம் ஆண்டின் மோட்டார் வாகன சட்டத்தின் 14 ஆம் இலக்க பிரிவின் கீழ் கட்டாய மூன்றாந் தரப்பு உரிமைக் காப்புறுதி ஏற்புடைதாகும் வரை மோட்டார் வாகன சட்டத்தின் 112(அ) பிரிவின் கீழ் காப்புறுதிச் சான்றிதழ் ஒன்றை மாற்றுவதை கம்பனி ஏற்றுக் கொண்டால் அது அவ்வாறு மாற்றப்பட்ட திகதியிலிருந்து 44 நாட்களுக்கு மாத்திரம் செல்லுபடியாவதாக மோட்டார் வாகன சாரதிகளுக்கும் காப்புறுதிப்பத்திர உரிமையாளர்களுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகிறது. இந்த ஏற்பானையானது காப்புறுதிப்பத்திரத்தின் பூரண காப்பீட்டின் கீழ் வழங்கப்பட்டுள்ள ஏனைய ஏதும் காப்பீடுகளுக்காக நீடிக்கப்பட மாட்டாது. ஏதும் காப்புறுதி செய்யப்பட்டுள்ள ஆபத்தினால் வாகனத்துக்கு ஏற்படுகின்ற இழப்பு அல்லது சேதத்துக்கு எதிராக காப்பீட்டைப் பெற விரும்புகின்ற எவரேனும் மோட்டார் வாகனம் மாற்றப்பட்டவர்கள் மாற்றல் பற்றிய சட்டரீதியான ஆவனங்களையும் வாகனத்தின் உரிமை தனக்கு கிடைத்தவுடன் கொன்டினென்டல் இன்சூரன்ஸ் லங்கா லிமிட்டெட்டின் எவரேனும் ஓர் உத்தியோகத்தருடன் தொடர்பு கொள்ளுமாறு கோரப்படுகிறார்கள். அவ்வாறு செய்யும் போது தேவையான தகவல்களை வெளிப்படுத்த வேண்டியதுடன் கோரப்பட்டுள்ள மாதிரிக்கு இணங்க கொன்டினென்டல் இன்சூரன்ஸ் லங்கா லிமிட்டெடுக்கு ஒரு பிரகடனத்தையும் மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு செய்யத் தவறினால் வாகனத்துக்காக வழங்கப்பட்டுள்ள காப்புறுதிக் காப்பீடு வாகனத்தின் உரிமை புதிய கொள்வனவாளருக்கு வழங்கப்பட்ட திகதி தொடக்கம் செயற்படுவது நிறுத்தப்பட்டு விடும்.